பக்கங்கள்: பன்னிரண்டு
Registered as a News paper in Sri Lanka
பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# வலம்புரி

VALAMPURI
விலை ரூபா.7.00
சங்கு 05 வள்ளுவர் ஆண்டு 2034 மார்கழி 23 புதன்கிழமை (07-01-2004) தொலைபேசி - 2223378 ஒலி 19

ராம்கோ சிமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

# ஜனாதிபதியும்–பிரதமரும் இணைந்து புலிகளின் திட்டவரைபில் இருந்து பேச்சுக்களை தொடர வேண்டும்

## இடதுசாரிக் கட்சிகள் பிரதமரிடம் கோரிக்கை

(நமது நிருபர்)

**பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பொறுப்பேற்றுள்ள போதிலும், ஜனாதிபதியும், பிரதமரும் அரசியல் இணக்கப்பாடு ஒன்றுக்கு வருவதன் மூலம் சமாதான முயற்சிகளை மீண்டும் முன்னெடுத்துச் செல்ல முடியும். இவ்வாறு புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ணா தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்றதில் இருந்து சமாதானப் பேச்சுக்கள் தடைப்பட்டமையையடுத்து ஜனாதிபதி-பிரதமர் இழுபறிநிலையை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்குடன் நான்கு இடதுசாரிக் கட்சிகளின் தலைவர்கள் கூடி நேற்றுப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவைச் சந்தித்துப் பேசிய பின் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அச் செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது, லங்கா சமசமாசக் கட்சி கமயூனிஸ்ட் கட்சி, ஜனநாயக இடதுசாரி முன்னணி ஆகிய கட்சிகளின் தலைவர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

இசசந்திப்பில் ஜனாதிபதி சந்திரிகாவுடன் குறித்த சில அம்சங்களின் கீழ் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும். இதன் மூலம் சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்ல முடியும்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் கைச்சாத்திடப்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையானது. சமாதானத்திற்குரிய பேச்சுவார்த்தையின் அடிப்படை அம்சமாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.

விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாகசபை தொடர்பான திட்டவரைபை சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான ஓர் ஆரம்பப்படிக் கல்லாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென இடதுசாரிக் கட்சிகள் விரும்புகின்றன.

இத்தகைய அம்சங்களின் அடிப்படையில் ஜனாதிபதியுடன் பேச வேண்டுமென்று பிரதமரிடம் கோரியுள்ளோம். இத்தகைய உடன்பாடு ஒன்று இருவருக்குமிடையில் ஏற்படுமானால் ஜனாதிபதியின் கீழ் பாதுகாப்பு அமைச்சு செயற்படுவது ஒரு தடையாக இருக்கமாட்டாது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தனது பதவிக்காலத்தை சமாதானத்தை அடைவதற்காகப்
(12ஆம் பக்கம் பார்க்க)

## ஐரோ.ஆணைக்குழு ஆணையாளருடன் அமைச்சர் மிலிந்த மொறகொட சந்திப்பு

(பிரேசில்)

பொருளாதார மறுசீரமைப்பு விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சர் மிலிந்த மொறகொட ஐரோப்பிய ஆணைக்குழுவின் வெளிவிவகார ஆணையாளர் கிறிஸ்பற்றனை நேற்றுச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். பெல்ஜியத்தின் தலைநகர் பிறேசிலில் உள்ள ஐரோப்பிய ஆணைக்குழுவின் தலைமையகத்தில் இச் சந்திப்பு நடைபெற்றுள்ளது.

டோக்கியோவில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில் கலந்து கொண்ட பிரதிநிதிகளை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திவரும் ஓர் அங்கமாக இச் சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

டோக்கியோ நிதி உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் வழங்கப்பட்ட நிதிஉதவிகளின் எதிர்காலத்திட்டங்கள் குறித்தே இச் சந்திப்பில் முக்கியமாகக் கலந்துரையாடப்பட்டது. இக்கலந்துரையாடலில் ஐரோப்பிய ஒன்றியத்தின் உயர்மட்ட அதிகாரிகள் குழுவும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ம)

## யாழ்.பல்கலைக்கழக ஊழியர்கள் நேற்று திடீர் வேலை நிறுத்தம்

### இன்று பேரவை கூடுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக் கழக ஊழியர் சங்கம், பல்கலைக் கழக நிர்வாகத்திற்கெதிராக மேற்கொண்ட வேலை நிறுத்தப் போராட்டத்தினால் பாதுகாப்பு மற்றும் நீர் விநியோக சேவை தவிர்ந்த ஏனைய அனைத்துப் பணிகளும் முற்றாக ஸ்தம்பித்தன. நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமான போராட்டம் நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர்ந்து நடைபெற்றது.

பாதுகாப்பு மற்றும் சுகாதார

கழகத்திற்கு வருகை தந்த தமிழ்க் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா ஊழியர்களது போராட்டம் தொடர்பாக ஊழியர் சங்கத் தலைவர் எஸ்.தங்கராஜா துணை வேந்தர் மற்றும் பதிவாளர் ஆகியோருடன் பேச்சு நடத்தினார்.

## மத வன்முறைகளை நிறுத்துமாறு ஜனாதிபதி ஜே.வி.பியை கோர வேண்டும்

# ஜனாதிபதி ஜே.வி.பியை கோர வேண்டும்

## ஐ.தே.மு செயற்குழு தீர்மானம்

(கொழும்பு)

ஜே.வி.பியினருள் சிலரே நாட்டில் மதரீதியான பிரச்சினைகளை உருவாக்குவதாக ஐ.தே.மு குற்றஞ்சாட்டியுள்ளது. அத்துடன் இதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்குமாறும் அது ஜனாதிபதியைக் கோரியுள்ளது. கடந்த திங்கள் அன்று நடைபெற்ற ஐ.தே.முன்னணியின் செயற்குழுக் கூட்டத்தில் இம் முடிபு எடுக்கப்பட்டது. கடந்த சில வாரங்களாக நாட்டில் மதக் கலவரங்களை உருவாக் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் குறித்து செயற்குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

நாட்டில் மதக் கலவரங்கள் இனக் கலவரமாக உருவாக வாய்ப்புண்டு. மதங்களுக்கு எதிரான நடவடிக்கைகளின் விளைவாக மத ஸ்தலங்கள் சிதைவடைவதுடன் ஏனைய மதத்தவர்களும் இதனால் அச்சமடைய வேண்டி ஏற்படும்.

அண்மையில் ஏற்பட்ட பதற்ற நிலையைப் பயன்படுத்தி கடைகள் மூடப்பட்டும், பௌத்த பிக்குகள் அச்சுறுத்தபட்டும் உள்ளனர். இவை அனைத்தும் மதத்திற்கு எதிரானவர்களால் மேற்கொள்ளப்படுகினறன. இத் தகைய கலவரங்கள் சோமதேர

(12ஆம் பக்கம் பார்க்க)

இரண்டாவது நாளாகவும் தொடர்ந்து நடைபெற்றது.

பாதுகாப்பு மற்றும் சுகாதார சேவையைத் தனியார் மயப்படுத்தல் கணக்குப் பதிவாளர் பதவி நிலைக்கு ஆட்சேர்ப்பு விதிமுறைக்கு முரணான வகையில் நியமனம் வழங்கியமை போன்ற பல்கலைக் கழக நிர்வாகத்தின் நடவடிக்கைகளைக் கண்டித்தே இவ் வேலை நிறுத்தப் போராட்டம் இடம் பெற்றது.

எனினும் நேற்று விரிவுரையாளர் தெரிவுக்கான நேர்முகப் பரீட்சை நடைபெறுவதற்காக சில மணி நேரம் துணைவேந்தரின் அலுவலகம் ஊழியர்களால் திறக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பிற்பகல் பல்கலைக் ராஜா துணை வேந்தர் மற்றும் பதிவாளர் ஆகியோருடன் பேச்சு நடத்தினார்.

எனினும் இப் போராட்டத்தை முடிபுக்குக் கொண்டுவரும் வகையில் துணை வேந்தரோ பதிவாளரோ ஆக்க பூர்வமான பதில் எதனையும் வழங்கவில்லை என்று மாவை சேனாதிராசா எம்.பி.ஊழியர்களிடம் தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறு இருக்க யாழ். பல்கலைக் கழகப் பேரவை இன்று பிற்பகல் 2 மணிக்குக் கூடவுள்ளது.

இக் கூட்டத்தில் ஊழியர் சங்கப் போராட்டம் தொடர்பாக ஆராயப்படுமென்றும் அதில் தமக்குச் சாதகமான தீர்வு கிட்டுமென்றும்

(12ஆம் பக்கம் பார்க்க)

# பொங்குதமிழ் எழுச்சி மட்டக்களப்பில் ஏற்பாடு

(மட்டக்களப்பு)

கிழக்குப் பல்கலைக் கழகத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பில் எதிர்வரும் 21ந் திகதி பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு நடைபெறவுள்ளது.

மட்டக்களப்பு ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் நேற்று நடைபெற்ற பொங்கு தமிழ் ஏற்பாட்டுக் குழுக் கூட்டத்தில் இம் முடிபு எடுக்கப்பட்டுள்ளது.

கிழக்குப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத் தலைவர் அருண் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் பல்கலைக்கழக மாணவர்கள், கல்விசார் நிறுவனங்களின் பிரதிநிதிகள் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மரபு வழித் தாயகம், தேசியம், தன்னாட்சியுரிமை விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் ஆகிய அம்சங்களை முன்வைத்து யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் ஆகிய இடங்களில் பொங்கு தமிழ் நிகழ்வுகள் ஏற்கனவே நடைபெற்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(ச)

# மனோ – மலிக் குழுவினர் பேச்சு ஒரு கேலி விளையாட்டு ஆகும்

## அமைச்சர் ராஜித சேனாரட்ண

(கொழும்பு)

தற்போதைய அரசியல் அமைப்புச் சர்ச்சையை முடிபுக்குக் கொண்டு வர மனோ-மலிக் குழுவினர் நடத்தி வரும் பேச்சுவார்த்தை ஒரு கேலி விளையாட்டாகும். அதனை மேலும் தொடர வேண்டாமென்று ராஜித சேனாரட்ணா பிரதமரைக் கேட்டுள்ளார்.

ஜனாதிபதி தொடர்ந்தும் பிரதமரைக் குற்றம் சுமத்திவருகிறார். உண்மையில் இது ஒப்பந்தத்தை மீறும் செயல் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயத்தில் ஒன்று அமைச்சர்களின் திணைக்களங்களை அவர்களிடமே விட்டுவிடுவது. ஆனால் ஜனாதிபதி அதனை நிறைவேற்றவில்லை. இந் நிலையில் ஒருவர் பேச்சுகளுக்கு வருவாரென எப்படி எதிர்பார்க்க முடியும்.

குறைந்தது இரு கட்சிகளிடமும் சிறிதளவு நம்பிகையாவது இருக்க வேண்டும். இல்லாவிடில் நாம் பேச்சுக்களை நடத்த முடியாது.

பேச்சுக்களில் இருந்து பெரிதாக நன்மைகள் எதுவும் கிடைக்காதபடியால் பேச்சுக்களில் இருந்து விலகுமாறு அரசாங்க கட்சிகளும் அமைச்சரவையும் பிரதரைக் கேட்டுள்ளது. இவ்வாறு ராஜித சேனாரடண தெரிவித்தார்.

இதேவேளை நாட்டின் அரசியல் சர்ச்சைகளுக்குத் தீர்வு காண்பதற்

(12ஆம் பக்கம் பார்க்க)


நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தியாகி அறக்கொடை நிறுவனம்

# ௨வது ஆண்டு நிறைவு விழா சிறப்பு மலர்

## 07-01-2004

### நல்லை ஆதீன முதல்வரின் ஆசிச் செய்தி



தியாகி அறக்கொடை நிறுவனம் தனது சமூகப்பணியில் இரண்டு ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ளமையையிட்டு பெரு மகிழ்ச்சியைத் தந்துள்ளது.

யாழ்ப்பாணம் நல்லூரைச சேர்ந்த திரு. வாமதேவா தியாகேந்திரன் அவர்களின் நிதிப் பங்களிப்போடு கடந்த இரு வருடங்களாக காலத்தின் தேவையறிந்து பலபயன் மிகு பணிகளை செய்து வருவது போற்றுதற்குரியது.

இந் நிறுவனம் நலிவுற்ற மக்களின் மேம்பாட்டிற்காக கல்வி, சுகாதாரம், பொருளாதாரம் போன்ற துறைகளில் பல்வேறு திட்டங்களை நாடளாவிய ரீதியில் சிறந்த முறையில் செயற்படுத்தி வருகின்றது. வறிய மாணவர்களின் கல்வி முதல் மருத்துவவசதிகள் வரை தேவையறிந்து செயலாற்றும் திறன் வலிமை வாய்ந்தது.

இவர்களுடைய பணி இன்னும் பல ஆண்டுகள் தொடர இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

**"என்றும் வேண்டும் இன்ப அன்பு"**

**இரண்டாவது குருமஹா சந்நிதானம்**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக**
**ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்**

நல்லை ஆதீனம்
நல்லூர்.

### சிவத்தமிழ் அன்னையின் ஆசிச் செய்தி



யாழ்.நகரில் இயங்கிவரும் தியாகி அறக்கொடை நிறுவனம் தனது இரண்டாவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாட இருப்பது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். திரு.வாமதேவா தியாகேந்திரன் அவர்களின் நன் முயற்சியினால் இந் நிறுவனம் ஆரம பிக்கப்பட்டு இன்று பல்வேறு சமூகப பணிகளையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அவரின் நன் முயற்சியைப் பாராட்டி தியாகி அறக கொடை நிறுவனம் மேலும் உயர்வடைய பிரார்த்தித்து ஆசிகூறி அமைகின்றேன்

**கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி**
**தலைவர்**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**

தெல்லிப்பழை

### யாழ். அரச அதிபரின் ஆசிச் செய்தி

சமூகப் பணியை மேற்கொண்டுவரும் தியாகி அறக் கொடை நிறுவனம் தனது இரண்டாவது ஆண்டை பூர்த்தி செய்வதையிட்டு எனது மனமார்ந்த பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

யாழ்ப்பாணம், நல்லூர் நாவலர் வீதியைச் சேர்ந்தவரும் தற்போது சுவிற்சிலாந்து நாட்டில் வசித்து வருபவருமாகிய திரு.வாமதேவா தியாகேந்திரன் அவர்களின் நிதியுதவியுடன் நலிவுற்ற மக்களின் மேம்பாட்டிற்காக இயங்கிவரும் இச் சமூக நிறுவனமானது, கல்வி, சுகாதாரம், பொருளாதாரம் போன்றதுறைகளில் குறிப்பாக வறிய குடும்பத்தைச் சேர்ந்த திறமையுள்ள மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் உழைப்பாளிகள் அற்ற குடும்பங்களுக்கு அவர்கள் நிரந்தர வருமானத்தைத்தேடும் வரையில் குறிப்பிட்டளவு உதவிப் பணத்தை மாதாந்தம் வழங்குதல், மாணவர்களின் ஆங்கில அறிவை வளர்ப்பதற்காக இலவச ஆங்கில வகுப்புக்கள் நடத்துதல். மருத்துவவசதிகள் அற்ற கிராமங்களில் இலவச மருத்துவ சேவை செய்தல், அத்துடன் மகரகம வைத்திய சாலையில் புற்று நோயால் பாதிக்கப்பட்டுத் தங்கியுள்ள நோயாளர்களுக்கு மாதாந்தம் உதவிப் பணம் வழங்கிவருதல் அது மட்டுமல்லாமல் சுயதொழிற் பயிற்சிக்காக இலவச தையல் பயிற்சி நிலையங்களை நடத்தி சுயதொழில் முயற்சிக்கான கடன் வசதிகளைச் செய்து கொடுத்தல் போன்ற திட்டங்களை நாடளாவிய ரீதியில் செயற்படுத்திவருகின்றது. இந் நிறுவனத்தின் சமூகப் பணியானது பாதிக்கப்பட்ட மக்களின் வளர்ச்சிக்காகத் தொடர்ந்தும் தனது சேவையில் ஈடுபட வேண்டுமென வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

**செ.பத்மநாதன்**
**யாழ்.அரசாங்க அதிபர்**

யாழ்.செயலகம்.
யாழ்ப்பாணம்

### தியாகி அறக்கொடை நிறுவனத்தின் அரும்பணிகள் சில...

*தியாகி அறக்கொடை நிறுவனம் நலிவுற்ற மக்களின் மேம்பாட்டிற்காக கல்வி, சுகாதாரம், பொருளாதாரம் போன்ற துறைகளில் சில திட்டங்களை நாடளாவிய ரீதியில் செயல்படுத்திவருகின்றது. அவற்றில் சில முக்கிய திட்டங்கள்*

- வறிய குடும்பத்தைச் சேர்ந்த 1600 திறமையுள்ள மாணவர்களின் கல்விக்காக ஒரு மாணவருக்கு ரூபா200 வீதம் மாதாந்தம் வழங்கப்படுகின்றது.
- உழைப்பாளிகளற்ற வறிய 139 குடும்பங்களுக்கு ஓர் நிரந்தர வருமானத்தை தேடும் வரை மாதாந்த உதவியாக ஒரு குடும்பத்திற்கு ரூபா 500 முதல் ரூபா1000 வரை வழங்கப்படுகின்றது.
- மாணவர்களின் ஆங்கில அறிவை வளர்ப்பதற்காக இலவச ஆங்கில வகுப்புக்கள் நடாத்தப்பட்டு வருகின்றது.
- மருத்துவ வசதிகளற்ற கிராமங்களில் இலவச மருத்துவ சேவை செய்யப்படுகின்றது.
- மகரகம வைத்தியசாலையில் தங்கியுள்ள புற்று நோயினால் பாதிக்கப்பட்ட 40 நோயாளிகளுக்கு உதவி தொகையாக மாதாந்தம் தலா ரூ.400/- வழங்கப்படுகிறது.
- சுயதொழில் பயிற்சிக்காக இலவச தையல் பயிற்சி நிலையங்கள் 3 இயங்கிவருகின்றது.
- சுயதொழில் முயற்சிக்காக கடன் வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றது.

### யாழ். கல்விப் பணிப்பாளரின் ஆசிச் செய்தி

யாழ்ப்பாணம் நல்லூர் நாவலர் வீதியைச் சேர்ந்த திரு.வாமதேவா தியாகேந்திரன் அவர்களின் நிதியினால் இயங்கும் தியாகி அறக்கொடை நிறுவனம் சமூகப் பணிகளில் ஆற்றல்கள் நிறைந்திட மகிழ்வுடன் அருளாசிகளை வெளியிடுகிறேன்.

கல்விக்கு, வறுமைக்கு, அறிவுக்கு, சிகிச்சைக்கு தொழிற்பயிற்சிக்கு வாழ்வின் எழுச்சிக்கு மழையின் கொடையைவிட அதிகமாக திரு.வாமதேவா தியாகேந்திரன் நாளும் வழங்கும் வள்ளல் நிலை நமது மண்ணில் தொடர வேண்டும்.

தேசியத்தின் சின்னமாக நாவலர் பெருமான் பாதங்கள் படிந்த வீதியில் நம் மண்ணின் நலிவகற்ற முளைதத தியாகி அறக்கொடை நிறுவனம் ஆற்றல்கள் குவிக்க வாழ்த்துக்கள்.


வசந்தப் பூக்களின் தொட்டிலில் நிம்மதியாக ஆடிட, பாடிட, வாழ்ந்திட நாளும் பாடுபடும் அறக் கொடை நிறுவனம் அதன் உழைப்பாளிகள் பயணங்கள் நண்டவாழ்வில் பணிகள் தொடர அருளாசிகள்.

சூரியன் விழித்ததும் சிரிக்கும் அழகு மலர்கள் போல் சமூக மேம்பாடுகள் மண்ணில் வள்ளல்களால் உறுதி செய்யப்படல் வேண்டும். இந்தப் பணியில் தான் பிறந்த ஊருக்கு நல்லது சொல்வேன், எனக்கு உண்மை தெரிந்தது சொல்வேன் என்று சீருக்கெல்லாம் முதலாகும் திரு.வாமதேவா தியாகேந்திரன் தெய்வத்துணையுடன் சேவையில் நீடூழி வாழ்ந்திட அருளாசிகள்.

**ப.விக்னேஸ்வரன்**
**வலயக் கல்விப் பணிப்பாளர்.**

கல்வி வலயம்
யாழ்ப்பாணம்

### யாழ். ஆயரின் ஆசிச் செய்தி



சுவிற்சலாந்து நாட்டில் வசித்து வரும் திரு.வாமதேவா தியாகேநதிரன் அவர்களின் நிதியுதவியுடன் நலிவுற்ற மக்களின் மேம்பாட்டிற்காக உதவிவரும் தியாகி அறக் கொடை நிறுவனத்தின் பணிகளை அறிந்து மகிழ்ச்சி அடைகின்றோம்.

நீண்டகாலப் போர் முடிவுற்றாலும் அதன் தாக்கங்களும் விளைவுகளும் எமது மண்ணையும் மக்களையும் விட்டு மிக விரைவில் நீங்கி விடப் போவதில்லை. உடல் உளரீதியாக போரின் தாக்கங்களையும் விளைவுகளையும் அனுபவித்தவர்கள் எம்மத்தியில் தொடர்ந்து சிலகாலம் வாழவே போகிறார்கள் என்பது உண்மையாகும். அநாதைகளாக, விதவைகளாக நோயாளர்களாக, வறியவர்களாக வாழப்போகின்ற இந்த மக்களுக்குச் செய்கின்ற பணி உண்மையிலேயே ஓர் உயர்ந்த பணியாகும். இப்பணிக்கு எம் மண்ணில் இன்று அதி முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய தேவையுண்டு.

வறியவர் ஒருவருக்கு மீனைக் கொடுப்பதைக் காட்டிலும் மீன்பிடிக்கக் கற்றுக் கொடுப்பது சிறந்தது என்பதை வெளிக் காட்டும் வகையில் பணமாகமட்டும் உதவியை வழங்காது சுயதொழில் முயற்சிகளுக்கும் இந் நிறுவனம் முன்னுரிமை கொடுப்பது பாராட்டுக்குரியது. இவர்களது இந்த அன்புப் பணியில் எதிர் காலத்தைக் கட்டியெழுப்பக்கூடிய உயர் கல்வி தொழில் முயற்சிகள் என்பவற்றில் இன்னும் அதிக கவனம் செலுத்தப்படலாம் என வேண்டுகோள் விடுக்கின்றோம்.

என்சின்னஞ்சிறிய சகோதரர்களுக்குப் பணி செய்த போதெல்லாம் எனக்கே செய்தீர்கள் என்ற யேசுபெருமானின் வார்த்தைகளை நினைவில் வைத்து நலிவுற்ற மக்களின் மேம்பாட்டிற்கு பணிபுரியும் இந் நிறுவனத்தை வாழ்த்தி, தாராள உதவி செய்ய இன்னும் பலர் முன்வர வேண்டுமென்று ஆசித்து நிற்கின்றோம்.

**மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை**
**யாழ்.ஆயர்**

ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.

### யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அதிபரின் ஆசிச் செய்தி

வசதி படைத்த பலர் தமது வருமானத்தை மேலும் பெருக்கி சமூகத்திற்காக எவ்வித உதவிகளை செய்யாது சமூகத்தைச் சுரண்டி உறிஞ்சி மேலும் பாவத்தைச் சேர்ப்பதை நாம் கண்டிருக்கிறோம்.

இறைவனால் வழங்கப்பட்ட செல்வத்தை எப்படி? ஏன்? செலவு செய்கிறோம் என்பதை தெரியாது வாழ்பவர்களே அதிகமானோர். இருப்பதைப் பகிர்ந்து மற்றவர்களும் வாழ, உயர, அவர்களிடம் இருக்கும் திறமையை சமூகத்திற்குப் பயன்பெற வைக்க வழி அமைத்து நிற்கும் கொடையாளர் சிலரையே எமது சமூகம் தன்னுள் கொண்டுள்ளது.

அந்த வகையில் அறக்கொடை நிறுவன இயக்குநர் திரு.வாமதேவா தியாகேந்திரன் அவர்களின் தன்னலமற்ற சமூகப்பற்றுதியுள்ள சேவையை நாம் மிகப் பெருமையுடன் வாழ்த்துகிறோம்.

தன்னைப் பெற்ற சமூகம் தன்னை ஏணியில் ஏற்றி உயர்த்திவிட்ட சமூகம் தனது மனநிலையில் மக்களை மதிக்கும் மாண்பை ஏற்படுத்திய சமூகம் உயர வேண்டுமென்ற எண்ணத்துடன் சமூகத்தில் உயரத் துடிக்கும் ஆனால் பொருளாதாரத்தின் தாழ் நிலையில் இருக்கும் சமூக அங்கத்தவர் ஒருவனுக்கு உதவும் மனநிலையை அவருக்கு ஆண்டவன் அளித்ததே முதல் சிறப்பாகின்றது.

இவ்வகையான கல்வி நிறுவனங்களில் கற்கும் மாணவர்களுக்கும், மற்றும் உயரத் துடிப்பவர்களுக்கும் ஒரு பாரம் தூக்கிபோல அவர்களைத் தூக்கிவிட்டு உயர்த்தும் உத்தமனாக திரு. வா.தியாகேந்திரன் இருப்பதைப் பாராட்டுகின்றேன்.அவர் புரியும் உதவி அவரது பரம்பரைக்குச் செலுத்தும் உரம் என்பதனை நாமும் உணர்ந்து கொள்கின்றோம். அவரது சமூகத் தொண்டும் தார்மீக உணர்வும், தாராள சிந்தையும் மேலும் வளர, வளம் பெற வாழ்த்துகின்றேன்.

அவர் நீடு வாழ இறையருள் என்றும் கிடைக்கும்.

**க.இராசதுரை**
**அதிபர்**

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
யாழ்ப்பாணம்.

பொதுசன நூலகம்

# இன்று ஒரு தகவல்

## உயில் எழுதுவது எவ்வாறு?

ஒரு பெரியவர் வந்தார். சார்! தகவல் சொல்வது நீங்கள் தானா? என்றார். ஆமாம் என்றேன்.எனக்கு ஒரு பெரிய பிரச்சினை. இப்போது அதற்கு நீங்கள்தான் ஏதாவது வழிசொல்லவேண்டும் என்றார். சரி... இன்றைக்கு வசமாக மாட்டிக் கொண்டோம் என்று முடிவுசெய்து கொண்டே "என்ன பிரச்சினை சொல்லுங்கள்" என்றேன். பிரச்சினை என்ன என்பதைப் பின்னர் சொல்லுகின்றேன். முதலில் என் கேள்விக்குப் பதில் சொல்லுங்கள் என்றார்.சரி கேளுங்கள் என்றேன்.

"சட்டத்தில் உயில், செட்டில்மென்ற் என்று இரண்டு வார்த்தைகள் அடிபடுகின்றனவே- அவைபற்றிய விபரம் தேவை. உயில் என்றால் என்ன? செட்டில்மென்ற் என்றால் என்ன?" என்று கேட்டார். சரி...சார் ஏதோ பெரிய இலட்சாதிபதி போல் இருக்கிறது. தன்னுடைய வாரிசுக ளுக்கு சொத்துக்களைப் பிரித்துக் கொடுக்கிற எண்ணத்தில் இருகிறார் என்பதை யூகித்துக்கொண்டேன்.

இருப்பினும் இதற்கு யோசனை கேட்க ஒரு நல்லவக் கீலைத் தேடிப் போயிருக்கலாம். அவருடைய நேரம் என்னிடம் வந்து சேர்ந்திருக்கிறார். இருக்கட்டும். பர வாயில்லை. நமக்குத் தெரிந்ததைச் சொல்லுவோம் என்று நினைத்து ஆரம்பித்தேன்.

'ஒருவர் தன்னுடைய சொத்துக்களை மற்றவர்களுக்கு அதாவது வாரிசுகளுக்கு எழுதி வைக்க வேண்டுமென்று நினைத்தால் அதை இரண்டு விதமாகச் செய்யலாம். ஒன்று உயில் மற்றது செட்டில்மென்ற்.

செட்டில்மென்ற்...என்பது என்னவென்றால் ஒருவர் உயிரோடு இருக்கிறபோது தன்னுடைய சொத்துக்களைப் பிரித்துக் கொடுத்து விடுவது. அப்படிப் பிரித்துக் கொடுத்த பின்னர் அதில் உரிமை கொண்டாட முடியாது, அது எனக்குச் சொந்தம் என்று சொல்லிக் கொண்டிருக்க முடியாது. செட்டில் மென்ற் செய்து விட்டால் அதன் பின்னர் அவருக்கு அதில் எந்தப் பாத்தியதையும் இருக்காது. சரி இதை எப்படி செய்வது? அது என்றும் பெரிய காரியமில்லை இப்படி இப்படி செய்வதென்று முடிவு செய்துவிட்டால், அதை ஒரு முத்திரைப் பத்திரத்தில் எழுதிப் பதிவு அலுவலகத்தில் பதிவுசெய்ய வேண்டும். அவ்வளவுதான் செட்டில் மென்ற். இப்படிச் செய்துவிட்டால் எங்கேயாவது ஒரு மூலையில் நிம்மதியாக உடகார்ந்துவிடலாம்.பின்பு சொத்துக்களை யாருக்கு எழுதி வைத்தீர்களோ அவராக மனது வைத்துச் சோறு போட்டால் அதையும் சாப்பிட்டுக் கொள்ளலாம் இல்லை யென்றால் சும்மா இருக்கலாம்.

இனி உயில் என்றால் என்ன? ஒருவர் தான் இறந்த பின்னர் தன்னுடைய சொத்து யார் யாருக்குப் போய்ச் சேர வேண்டுமென்று எழுதி வைப்பதுதான் உயில். உயிரோடு இருக்கிறபோது பிரித்துக் கொடுக்க ஏற்பாடு செய்வது செட்டில் மென்ற்.இறந்த பின் பிரித்துக் கொடுக்க ஏற்பாடு செய்வது உயில். இதைப் பதிவுசெய்ய வேண்டியதில்லை. பத்திரத்திலேயும் எழுத வேண்டியதில்லை. ஒரு சாதாரண வெள்ளைக் காகிதத்தில் எழுதினாற் கூடப் போதும் இரண்டுபேர் சாட்சிக் கையொப்பமிட்டால் சரி.

இந்த உயில் எழுதுகிற விடயத்தில் சட்டம் இவ்வளவு சலுகை காட்டுவதன் காரணம் ஒரு மனிதாபிமானமேயன்றி வேறொன்றுமில்லை. சாகப்போகிறவன் தன்னுடைய கடைசி ஆசையாக இந்த உயிலை எழுதுகின்றான். அந்த நேரத்தில் அவனிடம் போய் இதை முத்திரைப் பத்திரத்தில் எழுது. பதிவாளர் அலுவலகத்திற்கு எடுத்துக்கொண்டுபோ என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருப்பது நன்றா? எமன் எப்போது வந்து அழைத்துக்கொண்டு போவான் என்று நேரம் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதில் எழுந்து பதிவாளர் அலுவலகத்திற்கு போய்விட்டு வருவோம் என்று கூப்பிட்டால் அது முடிகிற அலுவலா? இதை யோசித்துத்தான் சட்டம் இந்தச் சலுகையைக்காட்டுகிறது. உயில்-செட்டில்மென்ற் என்ற மாதிரி வாரிசு அல்லது ஒருவருக்கு தானப் பத்திரமாகவும் ஒருவர் தன்னுடைய சொத்தை எழுதிக் கொடுத்துவிடலாம். இவைதான் விபரம்.

இப்படி நான் சொல்லிக் கொண்டிருந்த சமயத்தில் எதிரிலிருந்த பெரியவர் கொஞ்சம் நிமிர்ந்து உட்கார்ந்தார்.நான் அவரைப் பார்த்து "சார்! நீங்கள் கேட்ட விபரத்தைச் சொல்லிவிட்டேன். உங்கள் பிரச்சினை என்ன என்பதை நேரடியாகச் சொன்னீர்களானால் அதற்குப் பரிகாரம் தேடலாம். உயில் எழுதுவதில் ஏதாவது சிக்கலா? என்று கேட்டேன்.

"அதில் ஒன்றும் பிரச்சினை இல்லை. அதெல்லாம் எழுதிவிட்டேன். பத்து இலட்சம் ரூபா மதிப்புள்ள சொத்துக்களை எப்படிப் பிரித்துக் கொள்வது என்று ஏற்கனவே என் பிள்ளைகளுக்கு எழுதி வைத்துவிட்டேன்" என்றார் அவர். அப்படியென்றால். உங்களுக்கு ஏன் கவலை யென்றேன். "அந்தப் பத்து இலட்சம் ரூபாமதிப்புள்ளசொத்தை எப்படிச் சம்பாதிக்கிறதென்று யோசனை செய்து கொண்டிருக்கிறேன். அதற்குத் தான் உங்களிடம் ஆலோசனை கேட்க வந்தேன்" என்றார்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# கிளிநொச்சி மாவட்டத்தில் 4,466 குடும்பங்களுக்கு மீள் குடியமர்வு கொடுப்பனவு வழங்கப்படவில்லை

(மருதங்கேணி)

சத்ஜெய இராணுவ நடவடிக்கை காரணமாக கிளிநொச்சிப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்து தற்போது மீளக்குடியமர்ந்துள்ள மக்களில் மூன்றில் ஒரு பகுதியினருக்கு இதுவரை மீளக்குடியமர்வுக்கான எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படவில்லையெனத் தெரியவந்துள்ளது.

இது குறித்து கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் கருத்து தெரிவிக்கையில்,

சத்ஜெய இராணுவ நடவடிக்கை காரணமாக கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து புலம்பெயர்ந்து மீளக்குடி யமர்ந்துள்ள 18ஆயிரத்து 233குடும்பங்களில் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் மீள் குடியேற்றக் கொடுப்பனவுகளைப் பெறுவதற்கு அதாவது அமைச்சினால் வழங்கப்படும் 25ஆயிரம் ரூபாவினைப் பெறுவதற்குத் தகுதியானவர்கள் என 15ஆயிரத்து 719 குடும்பங்கள் இனம் காணப்பட்டுள்ளன.

கடந்த வருடம் நிக்கொட் நிறுவனத்தினூடாக 9ஆயிரத்து 275குடும்பங்களுக்கு ரூபா 25ஆயிரம் மீள் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ள போதிலும் மிகுதி 4ஆயிரத்து 466குடும்பங்களுக்கு சென்ற ஆண்டு இறுதியில் வழங்கப்படுமென புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு தெரிவித்திருந்தும் நிதிப் பற்றாக்குறை காரணமாக இதுவரை அக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை எனத் தெரிவித்தார்.(உ-35)

# கிளிநொச்சி நகருக்கான குடிநீர் வழங்கல் செயற்றிட்டம் சீரில்லை

(மருதங்கேணி)

நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபையினரால் மேற்கொள்ளப்படும் கிளிநொச்சி நகருக்கான நீர் வழங்கல் செயற்பாடுகள் சீரற்ற முறையில் இருப்பதன் காரணமாக, குடிநீரை சீரான முறையில் பெற்றுக்கொள்ள முடியாதிருப்பதாக சுட்டிக்காட்டி கிளிநொச்சி அரசஅதிபர் தி. இராசநாயகம், நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபையின் பிராந்திய முகாமையாளருக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தங்களுடைய மேற்பார்வையின் கீழ் இடம்பெற்று வரும் கிளிநொச்சி நகர அவசர குடிநீர்த் தேவைக்கான குழாய்களைப் பதிப்பதற்கு வீதி ஓரங்களிலும், குறுக்கு வீதிகளை ஊடறுத்தும் வாய்க்கால் வெட்டப்பட்டு குழாய்கள் பதித்தமுறை, விஞ்ஞான ரீதியாக நீர்கொண்டு போகக்கூடிய அளவிற்கு இல்லை.

ஒப்பந்தகாரர் நேராக இதனைப் பதித்துச் செல்வதற்குப் பதிலாக மரங்களையும் வேறு கடினமான நிலப்பகுதிகளையும் தவிர்த்து வாய்க்கால் வெட்டக்கூடிய நிலம் ஊடாக நீண்ட வளைவுகளைக் கொண்டதாக சீரற்ற முறையில் இந்த வேலையைச் செய்துள்ளார்கள்.

உண்மையில் இதன் மூலமாக மக்கள் குடிநீரை சரியான முறையில் பெற்றுக் கொள்வார்களா? என்பதனை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பும், கடப்பாடும் இருக்கின்றது என்பதை தயவான கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மேல் குழாய்கள் பதிப்பதற்கு வெட்டப்பட்ட மண்கள் சில இடங்களில் குழியை மூடுவதற்கு முழுமையாகப் பயன்படுத்தாது விடப்பட்டுள்ளது. சரியான முறையில் குழிகள் மூடப்பட்டு மொங்கான் இட்டு இறுக்காத காரணத்தால் பல பசுமாடுகள் அந்த வாயக்காலில் காலைப் பதித்த போது கால் முறிந்து சேதத்திற்கு உள்ளாகியது பற்றி எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இது பாரதூரமான தவறாகும். குறிப்பாக ஒப்பந்தகாரர் பொது இடங்களிலும் வீதிகளிலும் வெட்டப்பட்ட எல்லாக் குழிகளையும் வாய்க்கால்களையும் அதே மண் மட்டுமன்றி, வேறு இடங்களில் இருந்தும் மண் கொண்டுவந்து மூடி மொங்கான் இட்டு சாதாரண மக்கள் போகக்கூடிய அளவிற்கு திருப்திகரமாகச் செய்துகொடுக்க வேண்டிய கடப்பாடு ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

பொது வீதிகளை குறுக்காக வெட்டியவர்கள் அதனைச் சரியான முறையில் மூடாத காரணத் தினால் வாகனங்கள் விழுந்து செல்லவேண்டிய ஒரு பரிதாப நிலைக்குள்ளாக்கப்பட்டுள்ளது. ஆகவே ஒருவார காலத்திற்குள் இதனைச் சீர்செய்யாது விட்டால் சட்டநடவடிக்கை எடுத்து சகல நட்டஈடுகளையும் உங்களிடம் இருந்தும், ஒப்பந்தகாரரிடம் இருந்தும் அறவிடுமாறு கேட்கவேண்டி ஏற்படும் என்றுள்ளது. (உ-35)

# இராசிபலன்

**07. 01. 2004**

**(மார்கழி 23, புதன்கிழமை)**

| | |
|---|---|
| பூரணை முன்னிரவு | 9.47 வரை |
| திருவாதிரை | பி.ப. 4.28 வரை |
| இராகுகாலம் | 12.32-2.02 மணிவரை |
| சுபநேரம் | 5.02-6.32 மணிவரை |

பூரணை விரதம், உதயம் ஆருத்திராதரிசனம்

**மேடம்**

எடுத்த கருமங்கள் கைகூடும், செல்வாக்கு, தொழில் நன்மை, பொருள் சேர்க்கை.

**இடபம்**

அதிக வார்த்தை, எடுத்தகாரியம் தாமத மாகும், உடல்சோர்வு, பணவிரயம்.

**மிதுனம்**

ஆழ்ந்த சிந்தை, விருந்துபசாரம், கல்வியில் ஆர்வம், புதிய திட்டமிடல்.

**கடகம்**

சயன சுகக்குறைவு, வாக்குமேன்மை, பிதாசிந்தை, காரிய தாமதம்.

**சிங்கம்**

எதிர்பாராத நன்மை, கலந்துரையாடல், தொழில் வருமானம், காரிய அனுகூலம்.

**கன்னி**

பணியாளர் உதவி, தூரதேசச் செய்தி, முயற்சி கைகூடும், பெரியோர் சந்திப்பு.

**துலாம்**

தொழில் சிந்தை, மனச் சஞ்சலம், காரிய தாமதம், ரோக நிலை.

**விருச்சிகம்**

நண்பர்கள் விரோதம், வாகன பயம், எடுத்த காரியம் தாமதமாகும், அபகீர்த்தி.

**தனுசு**

களஸ்திர நன்மை, உற்சாகம், பாராட்டு, காரிய அனுகூலம்.

**மகரம்**

பகைவர் நேசம், தொழில் லாபம், முயற்சி கைகூடும், தேக ஆரோக்கியம்.

**கும்பம்**

புத்திரரால் கவலை, உறவினர்சந்திப்பு, சிறு வியாதி, தொழில் நன்மை.

**மீனம்**

நிலைக்கேடு, மாதா வழி உறவு, மனச்சோர்வு, காரிய தார்மதம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

# மனோ-மலிக் குழுவின் பணிகள் இம்மாத முடிவுக்குள் ஆரம்பம்

(கொழும்பு)

தமது விடுமுறையை முடித்துக் கொண்டு அடுத்த வாரம் நாடு திரும்பவுள்ள மனோ-மலிக் குழுவினர் தற்போதைய அரசியல் ஸ்திர நிலையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான கலந்துரையாடல்களை மீண்டும் ஆரம்பிக்கவுள்ளதோடு ஒரு சில வாரங்களில் இரு முக்கிய விடயங்கள் பற்றியும் அறிவிக்கவுள்ளனர்.

பேச்சுக்கள் விரைவில் ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகின்ற போதிலும் இன்னமும் திகதி குறிக்கப்படவில்லை என ஜனாதிபதியின் பேச்சாளர் ஹரிம் பீரிஸ் தெரிவித்தார்.

இதேவேளை, ஜனாதிபதி அமெரிக்கத் தூதுவர் ஜெபரி லன்ஸ்ரெட் உடன் கடந்த வெள்ளியன்று பேச்சுக்கள் நடாத்தினார் என்ற கூற்றை ஹரிம் பீரிஸ் மறுத்துள்ளார்.

ஜனாதிபதி சார்க் மாநாட்டிலிருந்து நாடு திரும்பியவுடன் அமெரிக்காவிற்கு பதில் அனுப்புவார் என எதிர்பார்க்கப்படுவதுடன் கொலின் பவலின் கடிதம் ஜனாதிபதிக்கு கிடைத்ததை ஹரிம் பீரிஸ் உறுதிப் படுத்தியுள்ளார்.

இரு தலைவர்களும் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டியது அவசியம். இதன் மூலமே சமாதானத்தை முன்னெடுக்க முடியும் என கொலின் பவல் அக்கடிதத்தில் வலியுறுத்தியிருந்தார். மேலும் அமெரிக்கப் பிரதி இராஜாங்க அமைச்சர் ஆர்மிடேஜால் பிரதமருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் அடங்கியுள்ள விடயங்கள் பற்றி தனக்கு எதுவும் தெரியவில்லை என பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்திருக்கிறார். (உ-6)

# தேசவழமை

வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
**சி.பத்மநாதன்**
பேராதனைப் பல்கலைக்கழகம்.

7

## அறிமுகம்

**தமிழர் வாழும் பிரதேசங்களும் வரலாற்று மூலங்களும்** - ஐரோப்பியரான வரலாற்றாசிரியர்களும் நிர்வாக அதிகாரிகளும் 17ஆம், 18ஆம் நூற்றாண்டுகளிலே எழுதிய நூல்களில் இலங்கையிலுள்ள அரசியலமைப்புகளான இராச்சியங்கள், சிற்றரசுகள் என்பன பற்றியும், அங்கு வழங்கிய மொழிகளைப் பற்றியும், அம்மொழிகள் வழங்கிய நாட்டுப் பகுதிகளைப் பற்றியும், மொழி வழக்கினை அடிப்படையாகக் கொண்ட தேசிய இனங்களைப் பற்றியும் பல குறிப்புகளை எழுதியுள்ளனர். அவர்களிற் சிலர் தாம் நேரடியாகக் கண்டு பார்த்தவற்றை அடிப்படையாகக் கொண்டு எழுதியுள்ளார்கள். றொபர்ட் நொக்ஸ்,பிலிப்பூஸ் வோல்டே ஆகிய இருவரும் அந்த வகையினோராவர். ஜான்ஷுறோய்டர், கிளெக்கோர்ண் ஆகிய இருவரும் வேறொரு வகையினர். அவர்கள் இலங்கையில் ஆதிக்கஞ் செலுத்திய காலனித்துவ அரசாங்கத்திலே சேவை புரிந்த காரணத்தினாலே நிர்வாக அறிக்கைகளிலுள்ள புள்ளி விபரங்களின் அடிப்படையிலும், நாட்டு நிலைகளை நேராக அவதானித்து அறிந்து கொண்ட விபரங்களின் அடிப்படையிலும் தங்கள் கருத்துகளை வெளிப்படுத்தியுள்ளனர். பெர்ணாவ் தே கேறோஸ் என்னும் போர்த்துக்கேயப் பாதிரியாரான வரலாற்றாசிரியர் இன்னொரு வகையைச் சேர்ந்தவர். அவர் இலங்கைக்குச் சென்று அந்நாட்டினை நேரிலே பார்க்கவில்லை. ஆயினும் இலங்கை பற்றிய பல வகையான மூலாதாரங்களைப் படித்து, அவற்றை ஆராய்ந்து மிக விரிவான முறையில் இலங்கை வரலாற்றை அவரால் எழுத முடிந்தது. போர்த்துக்கல் நாட்டிலுள்ள பல வகையான ஆவணச் சுவடிகளை அவரால்ஆராய்ந்துகொள்ள முடிந்தது. இலங்கையிலே சிங்களவரிடையிலும் தமிழரிடையிலும் பூர்வீக வரலாறு சம்பந்தமாக நிலவிய ஐதீகங்கள், மரபுகள் என்பன அடங்கிய ஆவணங்கள், இலங்கையிலே நிர்வாக சேவை புரிந்த போர்த்துக்கேய அதிகாரிகளினால் எழுதப் பெற்ற அறிக்கைகள் , குறிப்புகள், கடிதங்கள், லிஸ்பனிலும் கோவாவிலுமுள்ள உயரதிகாரிகள் எழுதிய பத்திரங்கள் , கட்டளைகள் முதலானவற்றை அவராற் பயன்படுத்திக் கொள்ள முடிந்தமை குறிப்பிடத்தகுந்தது.

ஐரோப்பியரின் ஆதிக்கம் இலங்கையில் ஏற்படுவதற்கு முன்பு அங்கு பல அரசியற் பிரிவுகள் காணப்பட்டன. அவை குறித்து கேறோஸ் மேல்வருமாறு விபரிக்கின்றார்.

"(அநு)ராசபுரம் இராசதானியாக விளங்கிய காலம் முழுவதும் இலங்கைத் தீவின் பகுதிகள் எல்லாம் தனியரசன் ஒருவனின் அதிகாரத்தின் கீழிருந்தன. ஆனால் தாழ் நிலங்கள் சீரழிந்த பின்பும், கோட்டை இராசதானி தோன்றியதைத் தொடர்ந்தும்,15 சிறிய இராச்சியங்கள் தோன்றிவிட்டன. அவை கோட்டை அரசனின் மேலாட்சியின் கீழிருந்தன. அதனாலே கோட்டை அரசனைச் சக்கரவர்த்தி என்று கருதினார்கள். இந்நாட்களிற் கண்டி ராசன் உரிமை கோரும் பட்டங்கள் கோட்டை அரசனுக்குரியனவாகும். தெனவக்க , ஊவா, வளவே, புத்தளம் , மாதோட்டம், பனங்காமம், முள்ளியவளை, திருகோணமலை, கொட்டியாரம், மட்டக்களப்பு, பாணமை, விந்தனை, ஒருப்பல , மாத்துறை என்பன அந்தச் சிறிய இராச்சியங்களாகும். இவற்றோடு கண்டி, வடபகுதியிலமைந்த யாழ்ப்பாண நாயன் பட்டினம், கோட்டை இராச்சியம் ஆகியவற்றைச் சேர்ப்பின் அவை எல்லாமாக பதினாறாகும்"

" சிலகாலஞ் சென்றதும் வெவ்வேறு காலங்களிலும் வெவ்வேறு சந்தர்ப்பங்களிலும் இலங்கை நான்கு இராச்சியங்களாகவும் மூன்று சிற்றரசுகளாகவும் பிரிக்கப்பட்டிருந்தது. கோட்டை, சீதாவாக்கை, கண்டி, யாழ்ப்பாண நாயன் பட்டினம் என்பனவே அந்த இராச்சியங்களாகும். ஏழு கோறளை, ஊவா, மாத்தளை என்பன சிறிய இராச்சியங்களாகும். இவற்றோடு வன்னியர் என்னும் பிரதானிகளின் வசமாயிருந்த பாணமை, மட்டக்களப்பு, உறுகுணை, புத்தளம் போன்ற பல பிரிவுகளும் இருந்தன"

கேறோஸ் பாதிரியார் எழுதியுள்ள குறிப்புகள் 17ஆம் நூற்றாண்டிலே எழுதப்பெற்ற வேறு நூல்களிலுள்ள விபரங்களினால் ஆதாரம் பெறுகின்றன. அந்த விபரங்கள் பல இந்நூலின் முதலாம் பகுதியிலும் மூன்றாம், நான்காம் பகுதிகளிலும் கையாளப்பட்டுள்ளன.

தமிழ்மொழி வழ்க்கினைப் பற்றி ஐரோப்பியர் கூறியுள்ளவை குறிப்பிடத்தக்கவை.

"நீர்கொழும்பிலிருந்து யாழ்ப்பாணப் பட்டினம் வரையுள்ள பகுதிகளிலே வாழுகின்றவர்கள் தமிழ் மொழியைச் சீராகப் பேசுகின்றனர். இலங்கையிலே, அவர்களே அதிக தயக்கமின்றிக் கிறிஸ்தவ சமயத்தை ஒப்புக்கொண்டார்கள்"

இது கேறோஸ் பாதிரியார் கூறியவை. தமிழ் மொழி வழக்குத் தொடர்பாக அவர் சொல்வனவற்றைக் காட்டிலும் பிலிப்பூஸ் வோல்டே என்னும் உலாந்தாக்கார பாதிரியார் கூறுவன அழுத்தமானவை, தெளிவானவை. இலங்கையில் வழங்கும் மொழிகளைப் பற்றி அவர் மேல்வருமாறு வர்ணிக்கின்றார். (தொடரும்)

### அருஞ்சொல் விளக்கம் (தொடர்ச்சி)

**சர்மவசனம்**- மரணசாதனம். திருநெல்வேலிப் பகுதி மொழி வழக்கில் உள்ளது.

**சீதனம்** - ஒரு பெண் கலியாணம் முடிக்கும் போது அவளுக்குப்பெற்றோராலுஞ். சகோதராலும் எழுதிக்கொடுக்கப்படும் சொத்து. முற்காலங்களிலே தாயின் சொத்துகள் எல்லாம் அவளுடைய பெண் மக்களின் உரிமையாகும் என்பது நியதி. சீதனமாக வழங்கப்படும் சொத்துகள் மீதும் எல்லாவிதமான உரிமைகளும் பெண்ணுக்குஉண்டு. தேசவழமைப்படி பெண்ணுக்குரிய சீதனம் ஆணுக்குரிய முதுசொம்முடன் கலப்பதில்லை. முற்காலங்களிலே சீதனம் பெண்களின் உரிமையை உறுதிப்படுத்துவதாய் அமைந்திருந்தது. நவீன காலத்தில் மட்டுமே அது ஒரு சமூகக்கொடுமையாக மாற்று வடிவம் பெற்றுள்ளது.

**சொம்** - சொத்து, உடைமை என்பவற்றை குறிக்குஞ் சொல். எல்லா வழமைகளுக்கும் பொதுவானது.

**தரகு**- சந்தைகளில் விற்பனையாகும் பொருள்கள் மீது வசூலிக்கப்பட்ட ஒரு வகையான வரி .

**தலையாரி**- கிராம மட்டத்தில் உள்ள தலைமைக்காரன். தமிழரசர் காலம் முதலாக வழங்கிய பதவிப்பெயர்.

**தரைவாரம்** - காணியில்லாதவன் .இன்னொருவனின் காணியைச் செய்கை பண்ணுமிடத்துக் காணிக்காரனுக்குக் கொடுக்கும் பங்கு. அது வழமைப்படி விளைவுகளில் மூன்றிலொரு பகுதியாகும்.

(தொடரும்)

**வலம்புரியின் அனுசரணையுடன்**
**வட்டுக்கோட்டை-சங்கரத்தை**
**பாலன் மில் உரிமையாளர்**
**இராசையா சோமசுந்தரம்**
**அவர்களின் ஞாபகார்த்தமாக நடாத்தப்படும்**

**கவிதைப் போட்டி -2004**

**1ம் பரிசு தங்கப் பதக்கம்**
**2ம் பரிசு வெள்ளிப் பதக்கம்**
**3ம் பரிசு வெண்கலப் பதக்கம்**
**இவை தவிர மேலும் பல ஆறுதல் பரிசுகள்**

**விடயம்**
**"தமிழா உனக்கேன் இக்கதி"**

**விதிகள்**

- போட்டியாளர் ஒரு கவிதை மட்டுமே போட்டிக்கு அனுப்ப முடியும்.
- விடயத்தில் தரப்பட்ட தலைப்பை பிரதிபலிப்பதாக கவிதைகள் அமைய வேண்டும். (கவிதைக்குள் விடயத் தலைப்புவரி இடம்பெற வேண்டும் என்பது அவசியமில்லை)
- போட்டிக்கவிதை மரபுக் கவிதையாகவோ அன்றி புதுக் கவிதையாகவோ அமையலாம்.
- மரபுக் கவிதையாயின் 12 வரிகளை மட்டும் கொண்டதாகவும் புதுக்கவிதையாயின் 12 தொடக்கம் 16 வரிகளுக்கு உட்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.
- கவிதைகள் யாவும் சொந்த ஆக்கமாக இருப்பதுடன், தெளிவாக எழுதப்பட வேண்டும்.
- கவிதை எழுதப்பட்ட தாளில் போட்டியாளர் தனது பெயரை எழுதுவது தவிர்க்கப்பட வேண்டும்.
- வயதெல்லை வரையறுக்கப்படவில்லை
- கவிதைப் போட்டியில் பங்குபற்றுபவர்கள் வலம்புரியில் வெளிவரும் கூப்பனையும் உறுதியுரையையும் நிரப்பி கவிதையுடன் இணைத்து அனுப்புதல் அவசியமாகும்.

**உங்கள் கவிதைகளை**
**கவிதைப்போட்டி-2004**
**வலம்புரி**

**இல-15,வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 31.01.2004ற்கும் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.**

★ **பரிசுக்கான கவிதைகள் நடுவர் குழுவால் தெரிவு செய்யப்படும்.**

இங்கே வெட்டி கவிதையுடன் இணைத்து அனுப்புக.

**இராசையா சோமசுந்தரம் ஞாபகார்த்த கவிதைப்போட்டி- 2004 விண்ணப்பம்**

**அலுவலகப்பாவனைக்கு**

முழுப்பெயர்.............................
.............................
தபால் முகவரி.............................
.............................
பிறந்த திகதி.............................
தே.அ.அ. இல .............................
மாணவராயின்/பாடசாலையின் பெயரைக் குறிப்பிடவும்.

.......... ..............................
திகதி போட்டியாளர் கையொப்பம்

உறுதியுரை

இத்துடன் அனுப்பப்படுகின்ற கவிதை எனது சொந்த ஆக்கம் என்றும் வேறு எந்தக்கவிதைகளின் தழுவலும் அல்ல என்றும். இப்போட்டிக்கு ஒரு கவிதையை மட்டுமே அனுப்பிவைக்கிறேன் என்றும் இத்தால் சத்தியம் செய்கிறேன்.

.............. ..............................
திகதி போட்டியாளர்கையொப்பம்

பொதுசன நூலகம்

# செய்தித் துளிகள்

## கண்காணிப்புக்குழு தலைவர் நியமனம்

(திருகோணமலை)

இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் திருகோணமலை மாவட்டத்தின் புதிய தலைவராக சேட்ர்பர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தின் தலைவராகப் பணியாற்றிய அடில் பூட்டான் வெளிநாடு சென்றதை அடுத்தே பிரதித் தலைவராகக் கடமையாற்றிய சேர்ட்பர் புதிய தலைவராக நியமனம் பெற்றுள்ளார்.

இதேவேளை 10 உறுபபினர்களைக் கொண்ட மாவட்டக் கண்காணட்புக் குழுவில் ஐவா கடற் கண்காணிப்பாளர்களாகவும் மீதி ஐவர் தரைக் கண்காணிட்பாளர்களாகவும செயற் பட்டுவருகின்றனர். (ம)

## வீதி ஓரங்களில் மண் அகழ்வு

ஏழாலை கிழக்கு அண்ணமகேஸ்வரர் ஆலயத்தில் இருந்து சுடுகாட்டிற்குச் செல்லும் வீதி ஓரங்களில் இடப்பட்டுள்ள மக்கி மண் சட்டவிரோதமாக வெட்டி அள்ளபபடுவதனால் அதனூடாக வாகனங்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (உ-188)

## கோடா கைப்பற்றி அழிப்பு

(மயிலங்காடு)

ஊரெழுவிலுள்ள பொக்கணை சனசமூக நிலைய நிர்வாகிகளும் கலாசாரம் பேணும் குழுவினரும் இணைந்து அண்மையில் அப்பகுதியில் உள்ள வெற்றுக்காணி ஒன்றில் இருந்து 3 பரல் கசிப்புக் கோடாவைக் கைப்பற்றி அழித்துள்ளனர்.

இதேவேளை, இப்பகுதியில் கசிப்பு உற்பத்தியை ஒழிக்கும் நடவடிக்கைக்கு கலாசாரம் பேணும் குழுவினரும் பொலிஸாரும் ஒத்துழைபபு வழங்கி வருகின்றமை குறிபபிடத்தக்கது. (உ-188)

## தனியார் காணிகளில் அத்துமீறி மண் அகழ்வு

(சங்கானை)

நவாலி தெற்குப் பகுதியில் உள்ள தனியாருக்குச் சொந்தமான காணிகளில் சட்டவிரோத மண் அகழ்வு அதிகரித்திருப்பதாக அப்பகுதி விவசாய சம்மேளனத் திடம் புகார் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை. இவ்வாறான சட்டவிரோத மண் அகழ்வுக்கு உளளாகும் காணிகளைக் கண் காணித்துவரும் மேற்படி விவசாய சம்மேளனம், மண் அகழ்வோர் மீது

## தங்கப் பதக்கம் வென்றனர்

(காரைநகர்)

காரைநகர் மணிவாசகர் சபையினால் நடத்தப்பட்ட சமய பாடப் போட்டிப் பரீட்சையில் சிறப்பான சித்தியெய்திய தி.பவிதா(கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி.),ம. சாம்பவி (யாழ்ற்றன் கல்லூரி), வி.கோபிகா (வலந்தலை வடக்கு அ.மி.த.க பாடசாலை) ஆகியோர் தங்கப் பதக்கம் வென்றுள்ளனர்.

கடந்த ஞாயிறன்று காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் இடம்பெற்ற மணிவாசகர் விழாவின் ஆரம்ப நிகழ்வில் இவர்கள் பாராட்டிப் பதக்கம் வழங்கிக் கௌரவிக்கபபட்டனர். (உ-246,70)

## புதிய நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் தெற்கு சிவபூதராயர் தேவஸ்தான தர்மகர்த்தா சபையின் நடப்பாண்டு நிர்வாக சபைத் தெரிவு அண்மையில் இடம்பெற்றபோது, தலைவராக ஐ.இராமசாமி, உப தலைவர்களாக இ.தம்பிரத்தினம், க.தியாகலிங்கம், செயலாளராக செ.அன்னராசா, உப செயலாளராக சு.ஶ்ரீகுமரன், பொருளாளராக பொ. கமலநாதன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். (உ)

## கால்கோள் விழா குறித்து அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ள தரம்-1 மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழாவை ஆக்கபூர்வமானதாக நடாத்தி, அது குறித்த அறிக்கையை தனக்கு அனுப்பி வைக்குமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் பி.விக்னேஸ்வரன் சகல யாழ .வலயப்பாடசாலைகளின் அதிபர்களையும் கேட்டுள்ளார்.

இவ் விழாவை, சமயப் பெரியார்களை அழைத்து ஆசி வேண்டல், இறைசிந்தனையை வளர்க்கும் கருத்துக்களைப் பரபபுதல், மாணவர்களிடையே நல்லுறவைப் பேணல் போன்ற நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டதாக நடாத்துமாறும் அவர் பணிபபுரை விடுத்துள்ளார். (உ-7)

## இளைஞனின் சடலம் மீட்கப்பட்டது

(சுழிபுரம்)

பொன்னாலை திருவடிநிலை தீர்த்தக்கரையில் நீராடிய போது அலையினால் அடித்தச் செல்லப்

## கலாசாரப் போட்டியில் வெற்றியீட்டியோருக்கு பரிசளிப்பு

(கொழும்பு)

மனிதவள அபிவிருத்தி, கல்வி, கலாசார அலுவல்கள் அமைச்சு நாடளாவிய ரீதியில் அரச ஊழியர்களிடையே நடாத்திய கலாசாரப் போட் டியில் வெற்றியட்டியவர்களுக்கான பரிசளிபபு விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பத்திரமுல்லை இசுருபாயவிலுள்ள கல்வி அமைச்சு அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்குத் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிழ்வில், முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றவர்கள் உட்பட 13 பேருக்கு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

தமிழ், சிங்கள இலக்கிய கர்த்தாக்களிடையே நடத்தபபட்ட இப் போட்டியில் முதலாமிடத்தை சிங்கள மொழி போட்டியாளரும், இரண்டாம், மூன்றாம் இடங்களை தமிழ் மொழிப் போட்டியாளர்களும் பெற்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-10)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

"குடும்ப உறவில் தொடர்பு ஊடகங்களின் செல்வாக்கு" என்ற தலைப்பிலான கலந்துரையாடல் இன்று பி.ப 3.00 மணிக்கு சென் பற்றிக்ஸ் வீதியில் அமைந்துள்ள அகவொளி நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

எழுத்தாளர் யோசப்பாலா தலைமையில் நடைபெறவுள்ள இக் கலந்துரையாடலில் செம்பியன் செல்வன் கருத்துரை வழங்கவுள்ளார் (உ-3)

## புராணப் படிப்பு

(பருத்தித்துறை)

தென்புலோலியூர் மூச்சம்புலம் சிவன் ஆலயத்திலும் சின்னத்தாய் விநாயகராலயத்திலும் கடந்த 29 ஆம் திகதி முதல் திருவாதவூரடிகள் புராணப்படிப்பு இடம்பெற்றுவருகின்றது. இப் புராணப்படிப்பு முடிவடையும் நாளான இன்றைய தினம் விசேட திருவிழா நடைபெறவுள்ளது. (உ-52)

## செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

அண்மையில் இடம்பெற்ற தரம்-6 இற்கான சுற்றாடல் கல்வி கருப்பொருள் அணுகுமுறை தொடர்பான செயலமர்வில் பங்கேற்கத் தவறிய அனைத்துப் பாடசாலை அசிரியர்களையும் எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை யாழ். இந்து மகளிர் கல்

# உயிரிழந்தோர் எண்ணிக்கை 7 ஆக அதிகரித்தது

(கொழும்பு)

காலி பத்தேகம பகுதியில் விஷச் சாராயம் அருந்தி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 7 ஆக அதிகரித்துள்ளது.

உயிரிழந்தோரின் சடலங்கள் இரசாயன பரிசோதனைக்காக நேற்றுக் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அனுபபி வைக்கப்பட்டுள்ளதாக பத்தேகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மதுசாரம் விஷமாகியதாலேயே இவர்கள் உயிரிழக்க நேரிட்டுள்ளதாகவும் இத்தகைய மதுசாரயத்தை சுமார் 200 பேர்வரை அருந்திப் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளார்கள் என்றும் இவர்களில் 15 பேர் காலி கராபபிட் டிய வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் கராப்பிட்டிய வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

விஷச் சாராயம் அருந்தியதாகக் கூறி வைத்திய சாலையில் அனு மதிக்கப்படுவோர்களின் எண்ணிக்கை மற்றும் உயிரிழப்போரின் எண்ணிக்கை என்பன மேலும் அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டிருப்ப தாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள் ளது.

இதேவேளை, விஷச் சாராயத்தை விற்பனை செய்ததாகக் கூறப்படும் 3 நபாகளைத் தேடி பொலிஸார் வலை விரித்துள்ள தாகவும் தெரிவிக்கபபடுகிறது. (உ-61,10)

# அகில இலங்கை கூடைப் பந்தாட்டப் போட்டிக்கு தெரிவு



யாழ்ப்பாணம் குருநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வி. றெமிங்ரா ஜோன் விக்ரர்,அகில இலங்கை கூடைப்பந்தாட்டச் சம்மேளனத்தினால் நடாத்தப்படவுள்ள போட்டிகளில் பங்கேற்பதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

யாழ்.மாவட்டக் கூடைப்பந்தாட்டச் சம்மேளனத்தால் மாவட்ட ரீதியாக நடாத்தப்பட்ட கூடைப்பந்தாட்டப் போட்டியில் சிறந்த வெற்றிகளை ஈட்டியுள்ள இவர், அகில இலங்கை ரீதியாக நடாத்தப்படவுள்ள கூடைப்பந்தாட்டப் போட்டிகளில் பங்குபற்றுவதற்கான பயிற்சிகளில் தற்போது ஈடுபட்டு வருகின்றார்.

இவர் கூடைப்பந்தாட்டத்தில் மட்டுமன்றி, மாகாண மட்டத்தில் நடாத்தப்பட்ட கரபந்தாட்டம் மற்றும் மெய்வன்மைப் போட்டிகள் பலவற்றிலும் பங்குபற்றிப் பல பரிசில்களைப் பெற்றுக்கொண்டவர்.

# சிறுவர் உரிமை மீறல்களை தடுக்க விசேட செயற்றிட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் சிறுவர் உரிமைகள் மீறப்படுவதை தடுக்கும் வகையில் யாழ். மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு விசேட செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இந்த அடிப்படையில் இவ்வாண்டு மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்கள் தொடர்பாக ஆலோசிக்கும் விதத்தில் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி ரி. மகாலிங்கத்துடனான விசேட சந்திப்பு ஒன்றை யாழ்.மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

எதிர்வரும் 12ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9மணிக்கு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ள இச்சந்திப்பில் பாடசாலைகளில் இவ்வாண்டு மேற்கொள்ளப்படவுள்ள சிறுவர் உரிமை பேணும் திட்டங்களுக்கு கல்வியியலாளர்களின் ஆதரவைப் பெறுவது குறித்து பிரஸ்தாபிக்கப்படவுள்ளது. (உ-4)

# ஆட்கடத்தல் குறித்த முக்கிய தகவல்கள் கசிவு

த்துவரும் மேற்படி விவசாய சம்மேளனம், மண் அகழ்வோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளது. (உ-34)

## சுன்னாகம் சந்தையின் மேற்பகுதி சேதம்

(மயிலங்காடு)

சுன்னாகம் சந்தையின் மேற்பகுதி சேதமடைந்துள்ளதால், மழைகாலங்களில் அங்கு வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதுள்ளதாக வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேற்படி திருத்த வேலைகளைச செய்வதற்குத் தாம் முன்வந்த போதிலும், பிரதேச சபையினர் அதனைச் செய்து தருவதாக வாக்களித்திருந்தும் இதுவரை எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லையென சம்பந்தப்பட்ட வியாபாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (உ-188)

## நெற்செய்கை பாதிப்பு

(மருதங்கேணி)

அண்மையில் பெய்த தொடர் மழை காரணமாக கரைச்சி மற்றும் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுகளில் 4 ஆயிரத்து 740 ஏக்கர் நெற் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது. (உ-35)

தீர்த்தக்கரையில் நீராடிய போது அலையினால் அடித்தச் செல்லப்பட்ட இளைஞனின் சடலம் மீட்கப்பட்டது.

நேற்று முன்தினம் பிற்பகல் 2.00 மணியளவில் அலையினால் அடித்துச் செல்லப்பட்டதாக கூறப்படும் இடத்திலிருந்து 50 மீற்றர் தொலைவில் இச் சடலம் கரையொதுங்கியது.

பொன்னாலையைச் சேர்ந்த முத்துலிங்கம் காந்தரூபன் (வயது 19) என்ற இளைஞனின் சடலமே கரையொதுங்கியதாகும்.

இவரது சடலம் இளைவாலைப் பொலிஸாரின் மரணவிசாரணையின பின்னர் உறவினர்களிடம்கையளிக்கப்பட்டது. (ச-80)

## உணவுப் பொருட்கள் அழிப்பு

(ஆனைக்கோட்டை)

சுதுமலைப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களில் சுகாதாரப் பரிசோதகர்கள் மேற்கொண்ட திடீர் பரிசோதனைகளின் போது, அங்கு காலாவதியான பிஸ்கட்டுகள் மற்றும் இனிப்பு வகைகள் ஆகியன கைப்பற்றி அழிக்கப்பட்டன.

இதையடுத்து, சம்பந்தப்பட்ட வர்த்தக நிலைய உரிமையாளர்கள் இவ்வாறான செயல்களில் இனிமேல் ஈடுபடக்கூடாதென கடுமையாக எச்சரிக்கப்பட்டனர். (உ-201)

எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் உள்ள ஆசிரியர் நிலையத்தில் நடைபெறும். இது குறித்த செயலமர்வில் தவறாது கலந்து கொள்ளமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் பி.விக்னேஸ்வரன் கேட்டுள்ளாாள். (உ-7)

## ஏழைகளுக்கு உதவி

(தொல்புரம்)

வலி.மேற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள வலி.தென்மேற்கு கிராம அலுவலர் பிரிவில் வறுமைக் கோட்டிற்குட்பட்ட குடும்பங்களுக்கு இந்து கலாசார அமைச்சின் உதவித் திட்டத்தின் கிழ் அண்மையில் 300 சீமெந்துப் பொதிகள் வழங்கப்பட்டன. (உ-70)

## திருவெம்பாவை பூர்த்தி

(தொல்புரம்)

தொல்புரம் கொட்டடியம்பதி அருள்மிகு ஆதிமுத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தில், திருவெம்பாவை பூர்த்திவிழாவான இன்று புதன் கிழமை காலை 9.30 மணி தொடக்கம் அம்பாளுக்கு விஷேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று தேவி திருவீதி வலம் வருதலும் அதனை தொடர்ந்து திரு ஊஞ்சலும் இடம்பெறவுள்ளது.

(உ-70)

# முக்கிய தகவல்கள் கசிவு

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் குடியேற்றவாதிகளை இத்தாலிக்குக் கடத்த முயன்றோர் தொடர்பான முக்கிய தகவல்கள் தமக்குக் கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த நடவடிக்கையுடன் தொடர்புபட்ட இரு முக்கிய நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் சட்டவிரோதக் குடியேற்றத தடுப்பு பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டி.எஸ்.வை. சமரதுங்க தெரிவித்துள்ளார்.

இவர்களுடன் சேர்த்து மேலும் 12பேர் இந்தச் சட்டவிரோத நடவடிக்கையுடன் தொடர்புபட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(உ-61,8)



சிறுவர் பாதுகாப்பு நிதியத்தால் அண்மையில் கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் நடாத்தப்பட்ட மிதிவெடி விழிப்புணர்வுக் கண்காட்சியின் ஒரு பகுதியைப் படத்தில் காணலாம்.

(படம்:- எஸ்.சுபானு அஜானந்)

# முற்றுப்பெறாத முடிவுகளோடு முடிந்துபோன 2003

## ஜூலை

01.07.2003 ★ பிந்துனுவெவ முகாம் படுகொலை வழக்கில் 5பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.




02.07.2003 ★ 6கோரிக்கைகளை முன்வைத்து சுகாதார அமைச்சு முன்பாக சுகாதார ஊழியர்கள் உண்ணாவிரதம்.

03.07.2003 ★ கனேடியத் தூதுவர் வலேறிறேமன் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் கிளிநொச்சியில் சந்திப்பு




08.07.2003 ★ நோர்வே விஷேட பிரதிநிதி ஜோன் வெஸ்பேர்க் கிளிநொச்சியில் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு.



14.07.2003. ★ மட்டக்களப்பு கல்லடிப் பாலத்தில் 8புலி உறுப்பினர்கள் பொலிஸாரால் கைது.

15.07.2003 ★ நாதஸ்வர மேதை என்.கே. பத்மநாதன் காலமானார்.

18.07.2003. ★ விடுதலைப்புலிகளின் திட்டமிடல் பணிப்பாளர் தூயவனுடன் உலக வங்கி இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி சந்திப்பு.



21.07.2003 ★ மாணவர் குழுக்களிடையே ஏற்பட்ட மோதலால் களனி பல்கலைக்கழகம் மூடப்பட்டது.

★ படையினரின் அடாவடிகளைக் கண்டித்து மட்டக்களப்பு, அம்பாறையில் ஹர்த்தால்.


★ பிரிட்டனில் நடைபெறவுள்ள 8வது தமிழர் விளையாட்டு விழாவில் பங்கேற்க தமிழீழ வலைப்பந்தாட்ட அணி அங்கு பயணம்.



22.07.2003 ★ புனரமைக்கப்பட்ட பாடசாலைகளை கையளிப்பதற்காக யாழ். வந்த அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன பல்கலைக்கழக மாணவர்களினால் திருப்பியனுப்பப்பட்டார்.



★ நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் சு.ப. தமிழ்ச் செல்வனுடன் சந்திப்பு.



பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# முற்றுப்பெறாத முடிவுகளோடு முடிந்துபோன 2003

## ஜுலை

23.07.2003 ★ திருநெல்வேலியில் பொது மக்களும் பல்கலைக்கழக மாணவர்களும் இராணுவத்துடன் முறுகல் நிலை.



★ பொங்கு தமிழ் குறித்து யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் செய்தியாளர் மாநாடு கொழும்பில் நடைபெற்றது.

27.07.2003 ★ சு.ப.தமிழ்ச் செல்வன் கிழக்கு மாகாணம் விஜயம்.



31.07.2003 ★ பாக். உள்துறை அமைச்சர் சகிட் பைசல் ஹையாத் இலங்கை வருகை.

## உலக அரங்கில்

02.07.2003 ★ பெத்தல ஹேம் நகரிலிருந்து இஸ்ரேலியப் படைகள் வெளி யேற்றம்.

08.07.2003 ★ தலை ஒட்டிப் பிறந்த ஈரானிய இரட்டைச் சகோதரிகளை வெட்டிப் பிரிக்கும் முயற்சி படுதோல்வி. சகோதரிகள் மரணம்.



★ அமெரிக்க ஜனாதிபதி புஷ் ஆபிரிக்கா விஜயம்.

17.07.2003 ★ பிரிட்டனின் ஆயுத விஞ்ஞானி டேவிட் கெலி தற்கொலை.

22.07.2003 ★ சதாம்ஹுசைனின் மகன்மார்களான உதேய், குசேய் ஆகியோர் அமெரிக்கப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

31.07.2003 ★ ராம ஜென்ம பூமி அறக் கட்டளைத் தலைவர் பரமஹன்ஸ் காலமானார்.

## ஓகஸ்ட்

01.08.2003 ★ கண்காணிப்புக்குழு - புலிகள் யாழ்ப்பாணத்தில் சந்திப்பு.

02.08.2003 ★ அமைச்சர் மிலிந்த, ஒஸ்ரின் ஆகியோர் வவுனியா விஜயம்.

03.08.2003 ★ ஜப்பானிய பிரதி அமைச்சர் ரெற்சுரோ ஜனு யாழ். வருகை.



04.08.2003 ★ ஜப்பானிய பிரதி அமைச்சர் பிரதமர் சந்திப்பு.



★ ஜப்பானிய பிரதி அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ சந்திப்பு.

★ கிழக்கு மாகாணத்தில் இருந்து வன்னி திரும்பிய சு.ப.தமிழ்ச்செல்வன் பிரபாகரனுடன் சந்திப்பு.

07.08.2003 ★ ஜனாதிபதி-பிரதமர் இடைக்கால நிர்வாக வரைபு குறித்து சந்திப்பு.

09.08.2003 ★ பிரதமர் சீனா பயணம்.



(தொடரும்)

# முன்னாள் செக்அதிபர் கேலலுக்கு காந்தி விருது


(புதுடில்லி)

செக் நாட்டின் முன்னாள் அதிபர் கேலலுக்கு சமாதானத்துக்கான அதியுயர் காந்தி விருது வழங்கப்பட்டது.

நேற்று முன்தினம் புதுடில்லியில் குடியரசுத் தலைவர் மாளிகையில நடைபெற்ற மனிதஉரிமைகள் விழாவில் குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் இதனை வழங்கிப் பாராட்டினார்.

இந்த விழாவில் செக் முன்னாள் அதிபரின் சேவைகளைப் பாராட்டிய குடியரசுத் தலைவர் அமைதியான வாழ்க்கைதான் அனைவருக்கும் தேவை என்றும், சமுதாயத்தில் வன்முறைக்கு இடமளிக்கக் கூடாது என்றும் கூறினார்.

துணைப் பிரதமர் அத்வானி மற்றும் மத்திய அமைச்சர்கள் இவ்விழாவில் பங்கேற்றனர். (து)



இந்தியா – பாகிஸ்தான் எல்லைப் பகுதியான வாகாவில் ஒவ்வொரு நாளும் காலையில் இரு நாட்டுக் கொடிகளும் ஏற்றப்பட்டு பின்னர் மாலையில் இறக்கப்படுவது மிகச் சிறப்பான காட்சியாகும். இது ஒரு வாடிக்கையான நிகழ்ச்சிதான் என்றாலும், இதனைக் காண அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை குறைவதில்லை.

# அமெரிக்காவுக்கு எதிரான புனிதப் போரைத் தொடருங்கள்

## பின்லேடன் அழைப்பு

அமெரிக்காவுக்கு எதிரான புனிதப் போரைத் தொடருமாறு தலைமறைவாக இருந்துவரும் சர்வதேசப் பயங்கரவாதி ஒஸாமா பின்லேடன் முஸ்லிம்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

பின்லேடன் பேசியதாகக் கூறப்படும் ஒலிப்பதிவு நாடா ஒன்றை அல் ஜஸீரா தொலைக்காட்சி நேற்று முன்தினம் ஒளிபரப்பியது.

ஈராக்கிற்குள் நுழைந்துள்ள அமெரிக்கப் படையினருக்கு எதிரான புனிதப்போர் தொடரவேண்டும் என்று பின்லேடன் அதில் கேட்டிருக்கின்றார்.

பலஸ்தீனத்துக்கு எதிராகவும் இஸ்லாமிய உலகத்துக்கெதிராகவும் அமெரிக்காவுடன் தோழமை கொண்டிருக்கும் அரபு நாட்டுத் தலைவர்களுக்கு பின்லேடன் தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

சதாம் ஹுசைன் கைதுசெய்யப்பட்டதற்குப் பின்னரும் அமெரிக்காவிற்குத் தொடர்ந்து ஆதரவு அளித்துவரும் வளைகுடாத் தலைவர்கள் கண்டனத்துக்குரியவர்கள் என்று ஒஸாமா பின்லேடன் மேலும் கூறியுள்ளார்.

ஒஸாமா பின்லேடன் அனுப்பியதாகக் கூறப்படும் இந்த ஒலி நாடா உண்மையானது தானா என்பதைத் தங்களால் உறுதிசெய்ய முடியாது என்றும், 47 நிமிடங்கள் நீடித்துள்ள இந்த ஒலிப்பதிவை குறைத்து 14 நிமிடங்களுக்கு ஒளிபரப்பியதாகவும் அல் ஜஸீரா தொலைக்காட்சியின் ஆசிரியர் தெரிவித்துள்ளார். (து)

# நெடுமாறன் மீதான வழக்கை ஒரு மாத காலத்துள் முடிக்கவும்

## அமர்வு நீதிமன்றம் உத்தரவு

(சென்னை)

தமிழ தேசிய இயக்கத் தலைவர் பழ நெடுமாறனின் பிணை மனுவை




செங்கற்பட்டு அமர்வு நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் சம்பந்தப்பட்ட புத்தகங்களை அச்சிட்டதாகவும் அவற்றை லண்டனுக்குக் கடத்தியதாகவும் ஆலத்தூர் நீதிமனறத்தில் அவருக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கில் பிணை மனு நிராகரிக்கப்பட்டதையடுத்து அமாவு நீதி மன்றத்தில் நெடுமாறன் பிணை மனுத்தாக்கல் செய்தார்.

பிணை மனுவை தள்ளுபடி செய்த நீதிபதி பெரிய கறுப்பையா ஆலத்தூா நீதிமன்றம் இன்னும் ஒரு மாதத்துக்குள் விசாரித்துத் தீர்ப்பை வழங்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இதைத் தொடர்ந்து சென்னை உயர் நீதிமன்றத்தில் நெடுமாறனின் பிணை மனு தாக்கல் செய்யப்படுமென்று அவரது வழக்கறிஞர்கள் தெரிவித்துள்ளனர்.

உயர் நீதிமன்றத்தில் பொடா வழக்கில் பிணை பெற்றநெடுமாறனுக்கு இநத வழக்கில் ஆலத்தூர் நீதிமன்றம் பிணை வழங்க மறுத்து விட்டதால் அவர் மேல்முறையீடு செய்ய வேண்டி நேரிட்டது. (து)



சார்க் மாநாட்டில் கலந்து கொள்வதற் காக இஸ்லாமாபாத் சென்ற பிரதமர் வாஜ்பாயை, பாகிஸ்தான் பிரதமர் மிர் ஜஃபருல்லா கான் ஜமாலி சந்தித் துப் பேசினார். மரியாதை நிமித் தமாகவே இந்த சந்திப்பு நடந்ததாக செய்திகள் கூறுகின்றன. சந்திப்பின் பொழுது இரு தலைவர்களும் கைகுலுக்கி வாழ்த்து தெரிவித்துக் கொண்ட காட்சி.

# புதுவையில் புதிய துணைநிலை ஆளுநர்

(புதுவை)

புதுவைப பிரதேச துணைநிலை ஆளுநராக என்.எம்.ஜா நேற்று முன்தினம் பதவியேற்றுள்ளார்.

ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற விழாவில் புதுவை நீதிபதி என்.சின்னபாண்டி அவருக்குப் பதவிப்பிரமாணம் செய்துவைத்தார். இந்நிகழ்ச்சியில் புதுவை முதலமைச்சர் ரங்கசாமி மற்றும் அமைச்சர்கள் பங்கேற்றனர்.

புதுவைத் துணைநிலை ஆளுநராக இருந்த கே.ஆர்.மல்காணி கடந்த ஒக்ரோபர் மாதம் காலமானதை அடுததே என்.எம்.ஜா அப்பதவித்கு நியமிக்கப்பட்டார்.(து)

# போலிமுத்திரைதாள் ஊழல் கர்நாடக அமைச்சர் ராஜினாமா

(பெங்களூர்)

30 ஆயிரம்கோடி ரூபா போலி முத்திரைத்தாள் வழக்கில் மத்திய மற்றும் எல்லா மாநில அரசுகளுக்கும், மற்றும் யூனியன் பிரதேசத்திற்கும் புலனாய்வுத்துறை நோட்டீஸ் அனுப்ப உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வழக்கறிஞர் அஜீ அகர்லலால் மற்றும் நான்கு பேர் தாக்கல்செய்த பொதுநல வழக்கை விசாரித்து வரும் நீதிபதி ரீயன்ஹரே, என்.பி. சிங்கா, மற்றும் எல்.எச்.கப்பாடியா ஆகியோர் அடங்கிய பெஞ்ச் இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

போலிமுத்திரைத்தாள் ஊழலில் எதிர்க்கட்சியினால் குற்றஞ்சாட்டப்பட்ட கர்நாடக அமைச்சர் றோசன் போலிங்கின் இராஜினாமாக் கடிதத்தை மாநில ஆளுநர் சதுர்லேரி ஏற்றுக்கொண்டார்.

முன்னதாக இந்தப் போலி முத்திரைத்தாள் ஊழலில் சம்பந்தப்பட்டவர் என எதிர்க்கட்சியினரால் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை அடுத்து கர்நாடக அமைச்சர் றோசன் போலிவ் சமர்ப்பித்த ராஜினாமாக் கடிதத்தை முதலமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா ஆளுநருக்கு அனுப்பிவைத்தார். (து)

# விடுதலைச் சிறுத்தைகள் இயக்கம் இந்திய பொதுத் தேர்தலில் போட்டியிடும்

(சென்னை)

வரும் நாடாளுமன்றத் தேர்தலில் விடுதலைச் சிறுத்தைகள் இயக்கம் போட்டியிடுமென்று அந்த இயக்கத்தின் தலைவரும் சட்டமன்ற உறுப்பினருமான திருமாவளவன் தெரிவித்தார்.

செய்தியாளர்களிடையே பேசிய அவர், தமது கட்சி கூட்டணியில் இடம் பெற்றோ அல்லது தனித்தோ போட்டியிடும் என்று தெரிவித்தார்.

இதேவேளை, கருணாநிதி தலைமையில் அமையவுள்ள தேர்தல் கூட்டணியில் இம்முறை சாதிக் கட்சிகள் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டா என கருணாநிதி ஏற்கனவே தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது(து)

WORLD NEWS

உலக தரிசனம்

# இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே நல்லுறவு நடவடிக்கைகள் தொடரும்

## தலைவர்கள் தெரிவிப்பு

(இஸ்லாமபாத்)

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே நல்லுறவை ஏற்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் நம்பிக்கையூட்டும் நடவடிக்கைகளை தொடர்ந்தும் மேற்கொள்ள இந்தியப் பிரதமர் வாஜ்பாயும் பாகிஸதான் அதிபர் பர்வேஷ் முஷாரப்பும் ஒப்புக்கொண்டுள்ளனர். இரு தலைவர்களுக்கும் இடையே இஸ்லாமபாத்தில் அதிபர் மாளிகையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது பரஸ்பரம் நம்பிக்கையூட்டும் நடவடிக்கைகளின் பின் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்த இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங்ஹு இரு தலைவர்களுக்கும் இடையே ஒரு மணிநேரததிற்கு மேலாக நடைபெற்ற இந்தச் சந்திப்பு சுமுகமான நட்புச் சூழ்நிலையில் நடைபெற்றதாகக் கூறினார்.

வாஜ்பாய், முஷாரப் ஆகிய இரு தலைவர்களின் இச்சந்திப்பை அடுததுக் கூட்டுப் பிரகடனம் ஒன்று வெளியிடக்கூடும் என பாகிஸ்தான் தகவல்துறை அமைச்சர் தெரிவித்த கருத்துப்பற்றி செய்தியாளர்கள் கேட்டதற்கு தான் கூறியதற்கு மேலாக எவரும் எதுவும் தெரிவித்திருந்தால் அவர்கள் அந்த நோக்கத்தை நியாயப்படுத்தவில்லை என்று ஜஸ்வந் சிங்க கூறினார்.

வாஜபாய் முஷாரப் சந்திப்புப் பற்றி செய்தியாளர்களிடம் விபரித்த பாகிஸதான் தகவல்துறை அமைச்சர் பயங்கரவாதம் காஷ்மீர் உள்ளிட்ட முக்கிய பிரச்சினைகள் இரு தலைவர்களின் பேச்சுவார்த்தைகளில் இடம்பெற்றிருந்ததாகக் கூறினார்.

இந்தியா பாகிஸ்தான் இடையே கூட்டுப் பிரகடனம் வெளியிடப்படும் எனத் தெரிவித்த அவர், சில விடயங்களை நீக்கும் வழிமுறைகள் பற்றி இரு நாட்டு வெளியுறவு அலுவலகங்களும் ஆலோசித்து வருவதாகத் தெரிவித்தார்.

இந்தியாவும் பாகிஸ்தானும் ஒருவர் பிரச்சினையை மற்றவர் தெளிவாகப் புரிந்து கொண்டு, பல்வேறு பரச்சினைகளுக்கும் இணைந்து தீர்வு காண்பதற்கான வழிவகைகளைக் கண்டறிய வேண்டும் என்று பிரதமர் வாஜ்பாய் வலியுறுத்தியிருக்கிறார்.

இன்று காலை இஸ்லாமபாத்திலுள்ள இந்திய ஹைக்கமிஷனின் கட்டடததின் இரண்டாவது பகுதிக்கு அடிக்கல் நாட்டிய பின் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். (து)



குருகோபிந்த சிங்கின் பிறந்த தினத்தை சீக்கிய மக்கள் கோலாகலமாகக் கொண்டாடினர். இந்த நிகழ்ச்சியையொட்டி புதுடெல்லியில் உள்ள சீக்கியக் கோயில் மின் விளக்குகளில் அலங்கரிக்கப்பட்டிருந்த காட்சி.

# 2004 புத்தாண்டுப் பலன்

**2004ஆம் ஆண்டில் பன்னிரு ராசிகளுக்கும் ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரையான பன்னிரு மாத பலன்கள் தனித் தனியாகக் கணிக்கப்பட்டு இங்கு தரப்படுகிறது. பன்னிரு ராசிகளுக்குமான மார்ச் மாதப் பலன்களின் தொடர்ச்சி.**

## துலாம்



**சித்திரை 3,4வது பாதம்-சுவாதி 4பாதங்கள்-விசாகம் 1,2,3 பாதங்கள் வரை 9பாதங்கள்**

உங்கள் ஏழாவது கேந்திரத்தில் செவ்வாய், ராகு, சுக்கிரன் ஆகவே உங்களுக்கு இப்போது தேவைகள் அதிகம்தான். ஆனால் பூர்த்திசெய்வதில் இடையூறுகள் இருக்கின்றன. சகோதர சகோதரி வகையில் சலிப்பு உண்டாகும். அரசியல் வாதிகளுக்கு அலைச்சல், அகால உறக்கம், அகால உணவு கொள்வதுதான் இருக்கும். உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களுக்கு தன்னையும் அறியாமலேயே தவறுக்கு ஆளாகக்கூடியவர்கள். இரத்த அழுத்தம், இருதய சம்பந்தமான பிணியும் உண்டாகலாம். கணவன் அல்லது மனைவி ஆரோக்கியம் தான் கவனிக்கபடவேண்டும் சிறு பிரயாணத்தை மேற்கொள்ள வேண்டியும் இருக்கும. பந்தயம், விளையாட்டு போன்றவை சிறு ஆதாயததைக் கொடுக்கும். உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்குப் பாதிப்பு ஏதும் இல்லை. பணப்புழக்கம்தான் எதிர்பார்த்தபடி இல்லை. பழைய நணபர்கள், மேல்மட்ட அதிகாரிகள் சந்திப்பும் உண்டாகும். தன்னம்பிக்கையில். தான் செல்ல வேண்டும். கணவன் மனைவி போக்கு மட்டும் திருப்தியாக இருக்கிறது. ஒப்பந்தத்தொழில் உள்ளவர்கள் மந்தநிலையை பெற்றவர்களாக இருப்பர். கடன் வழக்குவகையில் கவனம் செலுத்த வேண்டும். பிரயாணம் குறித்தபடி திருப்தியாக இருக்கமுடியாது. நீங்கள் எதிலும் உயர்வு தாழ்வு பார்க்காமல் செயல்பட கூடியவர்களே என்றாலும் உங்கள் தொழில் வழியில் மற்றவர் தலையீடு இல்லை. மலை, வனம், சூழ் பிரதேசங்களுக்குப் போய்வருதல் உண்டாகும். கலைப் பிரிவினர் பிரயாணம் முக்கியம் உடையவர்களே. பிரயா ணத்தைத் தள்ளிப்போடவேண்டியும் வரலாம். குடும்பத்தில் செலவுகள் ஒரேசீரான போக்கு உடையாதாக இருக்கும். ஆனால் செலவு அதிகமாகவே இருக்கின்றன. அவை வெளிவட்டார கௌரவச் செலவுமுதல் போட்டி, பந்தயம், ரேரு, லாட்டரி போன்றவகையில் இருக்கும். இதனைக் கட்டுப்படுத்துவது அவசியம். உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களுக்கு முக்கிய இடமாற்றம் இருக்கிறது. சிலர் பதவி மாற்றத்தையும் எதிர்பார்க்கலாம். மேல் அதிகாரி களிடம் இதமான போக்கு கொள்ளுவர். தூரத்து உறவினர் வழியில் துர்க் கருமச் செலவுகூட இடம்பெற வாய்ப்பு இருக்கிறது. குறிப்பிட்ட சில வகைக்கு பணம் பற்றாக் குறை இருக்கவே செய்யும். இதனால் அவசரப் பிரயாணம் மேற்கொள்வது, முக்கியஸ்தர்கள் சந்திப்பும் உண்டாகும். கணவன் மனைவி உறவு திருப்தியாகவே இருக்கும். குழந்தைகள் ஆரோக்கியம் மட்டும் செலவைத் தருவதாக அமைந்திருக்கும். அதேபோன்று குடும்பத்தில் பெண்கள் உடல்நலம் பாதிப்பு மருத்துவச் செலவு இடம்பெறுவதும் இருக்கும். சொத்து சம்பந்தமான வகையில், சகோதர சகோதரி வகை மனபேதம் உருவாகி நீங்கும். பழைய நண்பர்கள் சிலரையும் இப்போது சந்திக்கும் அவசியம் உண்டாவது, திருமணம் போன்ற சுப விஷயங்களுக்கு முடிவு காண்பதும் உண்டாகும்.

## விருச்சிகம்



**விசாகம் 4 வது பாகம் அனுஷம் 4 பாதங்கள்-கேட்டை 4பாதங்கள் வரை 9 பாதங்கள்**

உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களுக்கு இம்மாதம் சற்று அலைச்சல் உள்ள மாதமாக இருந்த போதிலும் அலுவலகப் போக்கு அமைதியாகவும் மகிழ்ச்சி நிறைந்ததாகவும் இருக்கின்றன. தனிநிலை தன்நிறைவு உடையதுதான் என்றாலும் குடும்பத்தில் சுபசெலவுகளுக்கு கடன் வாங்கியும் செலவழிக்க வேண்டிவரும். சிலர் குடும்பத்தில் குழந்தைப்பேறு மகிழ்ச்சி தருவதாகவும் இருக்கும். சில வகையில் நீங்கள் இப்போது வெளிச்சமான எல்லைக்கு வந்திருப்பது போன்ற உணர்வுதான் இருக்கும். சிலவகையில் நீங்கள் தன்னிச்சையைக் கொண்டு இயங்கும் வகையில் சூழ்நிலையைப் பெற்றுவிட்டீர்கள் என்பதால் ஒரே சீரான போக்கை கடைப்பிடிப்பது நல்லது. பழைய கணக்குகளை முடிப்பதாக இருக்கும். இதனால நாள்பட்ட வழக்கும் முடிவுக்கு வந்துவிடும். அலைச்சல் குறைந்து வருகிறது. அவசரத் தேவைகளை உடனுக்குடன் பூர்த்தி செய்துகொள்வது மன நிம்மதியைக் கொடுக்கும். கலைப்பிரிவினர்களுக்குத்தான் எப்போதோ செய்த சில ஒப்பந்தம் அல்லது கையெழுத்தினால் இப்போது விஷயங்கள் அல்லது சொத்து விவகாரங்களில் சுமுகமான லாபத்தைக் காணலாம். கவன மறதி சற்று அதிகமாக இருக்கும். சிறு சிறுபிரயாணமும் உங்களை விடாது. கடன் வழக்கு போன்றவை கட்டுக்கு அடங்கி இருந்தாலும் கடைசிப்பகுதி பற்றாக்குறை இருக்கவே செய்யும். பழைய நண்பர்கள் சிலரை சந்திப்பதால் புதிய பிரச்சினைகள் தீர்க்க வழிபிறக்கும். உத்தியோகப்பிரிவு ஆண் பெண்களுக்கு கவன மறதியினால் தவறு ஏற்படும். மேல் அதிகாரிகள் சீற்றத்திற்கும் வாக்கு வாதத்திற்கும் ஆளாகுதல் போன்றவை உண்டாகும். குழந்தைகள் வகை சிறு மருத்துவச்சிலவு இருக்கிறது. உங்களுக்கு அலைச்சல் இருக்கிறது. பணச்செலவுங்கூட இருக்கிறது. குடும்பவகையில் எல்லாம் நன்றாக இருந்தும் உங்கள் தேகசுகம் கவனிக்கத்தக்கது. நரம்புநோய் சிதளப் பாதிப்பும்கூட இருக்கும். கணவன் மனைவி உறவு நன்றாகவே இருக்கின்றன. குடும்பத்து உறவு பிரச்சினைகள் தொடர்ந்து இருந்துவரும். வழக்கு உள்ளவர்கள் செலவைத்தான் ஏற்றவேண்டி இருக்கிறது. சகோதர சகோதரிவகையில் மனத்திருப்தியான போக்கு இருக்கமுடியாது. புத்திரியர்கள் கல்வி மேன்மை இருக்கும் எல்லாவகையிலும் திருப்தியான சூழ்நிலை இருந்துவரும். உங்களைக் குறைகூறியவர்கள் இப்போது உங்களைப் பின்தொடரும் காலம். உங்கள் வேகமான செயல்கள் மற்றவர்களை பொறாமை செய்யும் என்றாலும் உங்கள் காரியங்கள் எதுவும் தடைப்படாது. முதாதையர் பொருளை விற்பனைசெய்யவும் சில மாற்றமும் அவசியமாகும். உங்கள் கடன்வழக்கு பிரச்சினைகளும் தீர்ந்துவிடும். வார்த்தைக்கு மதிப்புள்ள காலம் இது. செய்யும் தொழில் பெரிய முன்னேற்றத்தைக் கொடுக்கும். இல்லற வாழ்கை சிறக்கும். திருமணம் உண்டாவது, நல்ல நண்பர்களைச் சேர்ப்பது, சிலா அயல்நாடு செல்வதும் இப்போது உண்டாகும். உத்தியோகப் பிரிவினருக்கு பதவி உயர்வும் கொடுக்கும் காலம்.

## தனுசு



**மூலம் 4 பாதங்கள்-பூராடம் 4பாதங் கள் உத்தராடம் முதல் பாதம் வரை 9 பாதங்கள்**

சில புதிய முயற்சிகள் பிறரால் பாராட்டையும் உதவியையும் உண்டாக்கும்.

# உங்களுக்கு எப்படி?

கணவன் மனைவி உறவு திருபதியாகவே இருக்கும் என்றாலும் மனைவிக்கு உஷ்ண சம்பந்தமான நோய் தோன்றிவிடும் கவனம் தேவை. காதலர்களுக்கு சுமாரான காலமாகும். கடன் தொல்லைகள் வழக்கு வியாஜ்ஜியங்கள் குறையும். தூரதேசப் பயணங்கள் ஒரு சிலருக்குக் கைகூடும் செய்தொழில் எதுவாயினும் தீவிர கவனம் வேண்டும். சனி மாற்றம் அடையப் போகிறான். வேகம்குறைய ஆரம்பித்துவிட்டன் என்பதை கவனிக்கவும். ஒட்டி உறவாடி வந்த நண்பர்களும் சட்டென விலகிக் காணப்படுவர். அரசாங்கத்தின் கண்காணிப்பு அதிகரிக்கும். பெரிய மனிதர்களின் தொடர்பு இருந்தும் சகாயம் கிடைக்காது. வரவு எவ்வளவுதான் வந்தாலும் பணம் கையில் தங்காது. ஏதாவது திடீர்செலவு ஏற்படும். குடும்பத்தில் பொதுவாக திருப்தியற்ற நிலை காணப்படும். கணவன் மனைவிக்குள் அடிக்கடி கருத்து வேற்றுமை காணப்படும். அதிக அலைச்சல், சரியான தூக்கமின்மை காரணமாக உடல் ஆயாசம் இருக்கும். தகுந்த ஓய்வு தேவை. வண்டி வாகனங்களை மாற்றிடவோ அல்லது விற்றிடவோ நேரும். போட்டி, பந்தயங்களில் ஈடுபாடு அதிகரிக்கும். செய்தொழில் எதுவாயினும் திருப்திகரமாக இருக்கும். உத்தியோகத்தில் இருக்கும் ஆண், பெண்களுக்கு புதிய பொறுப்புகள் வந்துசேரும். கடிதத்தொடர்பு இப்போது கவர்ச்சியாக இருக்கும். சிலருக்கு கல்யாணமும் கூடிவந்துவிடும். புத்திரியர் கல்வி பாராட்டுக்குரியதாக அமையும். அவர்கள் போட்டி, பந்தயம், விளையாட்டு போன்ற வழி களில் விருதுபெறக் கூடியவர்களாக இருப்பர். கடின உழைப பினால் கணிசமான தொகையும் கைக்குவந்துசேரும். அது மகிழ்ச்சியே! தொழில் சம்பந்தமான பிரச்சினைகளில் உங்கள் போக்கு மற்றவர்களால் பாராட்டு பெறக்கூடிய துதான். சிலவழி நன்மை இல்லைதான் என்றாலும் சனி சாரம் பெற்றவன் என்ற சமாதானத்தை கூறமுடியாது. என்றாலும் குருபலம் கூடும். நண்பர்கள் ஆதரவு நல்கிடும் என்பதில் சந்தேகம் இல்லை. செய்தொழில் வகையில் நாட்டம் செலுத்துங்கள். லாட்டரி, போட்டி பந்தயத்தை நம்பி ஏமாற வேண்டாம். பத்தில் குரு பற்றி பயம் வேண்டாம். இனி தேக சுகம் அதிகரிக்கும். உடல் வீரிய விருத்தியினை உடையவராக விளங்குவீர்கள். அமைதியான போக்கு நிலவி வரும். தொழில் கூட்டு மனிதர்களிடமும் இப்படியே சிலர் அந்நிய நாட்டு பிரயாணத்தை மேற்கொளள அவசர முயற்சி உடையவராக இருப்பர். குடும்பம் இவை மந்தமான போக்கில உள்ளவர்கள் சிலருக்கு ஜலப்பிரதேச மனிதர்கள் மூலம் தன உபகாரம் கடைசியில் கிட்டும். உயர் அதிகாரிகளை சந்திப்பதும் உண்டாகும். நெருக்கடிநிலையில் வரவு செலவு குறைவாகத் தெரிகிறது. குடும்ப பொறுபபுகள் எதையும் உதாசினம் செய்ய முடியவில்லை. நீங்கள் எதையும் ஏற்று செய்யவேண்டியதான். கணவன் மனைவி போக்கு நன்றாகவே இருக்கிறது. புத்திரன் புத்திரியர் முன்னேற்றத்தில் உங்கள் கவனம் தேவைப்படுகின்றது.

மேலும் இந்தக் காலம் பிறக்கும் குழந்தைகளுக்கு எல்லா செல்வமும் பெற்று விளங்குவதாக இருக்கும். கடனும் வழக்கும் காத வழியில் நிற்கும். கலைப்பிரிவினர் ஆண், பெண்களுக்கு இது வரப்பிரசாதகமாக இருக்கும். இப்போது பழைய கடனில் ஒரு பகுதி அடைக்கப்படுவதும் இருக்கும். புதுக்கடனும் வந்துசேரும். கலைத் துறையினருக்கு பொறுப்புகள் மிகுந்த காலமே.


## மகரம்



**உத்தராடம் 2,3,4வது பாதங்கள்-திருவோணம் 4 பாதங்கள்-அவிட்டம் 1,2 பாதங்கள் வரை 9 பாதங்கள்**

இப்போது சுக இல்லத்தில் சுக்கிரன் ராகு, செவ்வாய் ஏதோ ஒரு வகையில் தவறுசெய்ய தூண்டுகிறதே. உத்தியோகத்துறையினருக்கு பதவி உயர்வு இடமாற்றமும் கூட இருக்கிறது. சிலர் குடும்ப உறவில் நடக்கும் விருந்து வேடிக்கையில் கலந்துகொள்வதும் உண்டாகும். வெளி வட்டார மனிதர்கள் உங்கள் தொழில் வகைக்கு எழுத்துமூலம் நன்மையைத் தேடித்தரக கூடியவர்களே. இந்த ராசிப் பெண்களுக்கு புது உடைகள் சிறந்த ஆபரணச் சேர்கையும் உண்டாகும். துரிதப்போக்கு உடையவர்கள் நீங்கள். சிலர் முன்பு இருந்த பூர்வீகப் பொருட்கள் திரும்ப வாங்குவதும் உண்டாகும். போட்டி, பந்தயம், விளையாட்டுப்போன்ற வகைகள் கவனத்திற்கு இனிய சூழ்நிலையை உண்டாக்கும். தொடர்புக்கு மிகவும் ஏற்ற மாதமிது. இடைப்பகுதியில் நண்பர்கள் உறவினர்கள் எல்லோரும் உங்களுக்கு ஒத்துழைப்புக்கொடுப்பர். அரசியல் அரசாங்கத்துறையில் நீங்கள் எதிர்பார்க்கும் எழுத்துவகை நன்மையும் இப்போது கிடைக்கும். இது இருந்தாலும் கால தாமதமதான். சனியின் வேகம் குறைந்து கொண்டு வருவதால் நீங்கள் முதலீடு செய்வதில் சில மூத்தவர்கள் ஆலோசனை இப்போது தேவைப்படுகிறது. இதனால் அடிக்கடி பிரயாணம் செய்வதும் இருக்கும். அரசாங்க மனிதர்கள் இப்போது உங்களுக்கு இணக்கமான போக்கில் இயக்கம் கொள்வது மகிழ்ச்சிக்குரியதாக இருக்கும். கலைத்துறையே தொழிலாகக் கொண்டவர்களுக்கு குடும்பத்து சொத்துவகை வழக்கு இருந்தால் முடிவுபெறாமல் தள்ளிப்போகும். சகோதர, சகோதரி வகையில் சில சமயம் கசப்பான சூழ்நிலையும் உண்டாகும். ராகு உங்களுக்குத் தரும் தனவரவு மகிழ்ச்சிகரமான போக்கை உண்டாக்கும். இதனால் குடும்பத்தில் நாகரிகப் பொருள் சேர்க்கைக்கும் வழி உண்டாகும். உறவினர் அல்லாமல் வெளியார் அந்நிய இனத்தவரின் நட்பும் உதவியும் மிகவும் நெருங்கியதாக இருக்கும். கணவன் மனைவி உறவு திருப்திதரும் அளவு வளர்ந்துவிடும். உறவினர் மூலம் ஏற்பட்ட குழப்பத்தையும் வெகு எளிதில் தகர்த்து எறிந்து விடலாம். கலைப் பிரிவினர் நீசத் தொழில் செய்பவர்களுக்கு கணிசமான ஆதாயம் இருக்கும். கண், காது, பல் நோய் போன்றவை தோன்றி விலகும். இதனால் குடும்பத்தில் ஆரம்பத்தில் இருந்துவந்த மந்தநிலை அகன்றவிடும். தொழில் வகையில் நீங்கள் துரிதப்போக்கில் இயங்குவது கண்டு உங்கள் கூட்டாளியோ மற்றவரோ பொறாமைப்படத்தான் செய்வர். நீங்கள் கௌரவத்தைப் பார்ப்பதோடு பண விஷயத்தையும் கவனிக்க வேண்டும். மற்றவர் பெருமை பேசப் போகிறார்கள். இக்காலம் திருமணம் ஏற்கும் சிலருக்கு அழகான மனைவியும் அமைப்பான பொருளும் வந்துசேரும.

## கும்பம்



**அவிட்டம் 3,4வது பாதங்கள்-சதயம் 4பாதங்கள்-பூரட்டாதி 1,2,3பாதங்கள்வரை 9 பாதங்கள்**

இப்போது உங்கள் ஆட்சிக்கிரகம் வலிமை பெற்றிருப்பது சிறப்புத்தான். ஏழில் இருக்கும் குரு வக்ரம் இடமாற்றத்தையே பெற்றிடுவீர். உங்கள் சத்துருக்கள் பலம்குறைந்த மாதம் இது. கலைப்பிரிவினருக்கு முன்புசெய்த ஒப்பந்தம் புதுப்பித்தல், பணவரவு, சந்தோஷ செய்தியும் உண்டாக்கும். ஆனால் எதிரே இருக்கும் ஆண்டு நன்மையானது. பகைப்பட்டிருந்தவர்கள் இப்போது இணக்கமான போக்கில இயக்கம் கொள்வர். எழுத்து, ஒப்பந்தம்• போன்ற நன்மைகள் சிலதும் உண்டாக்கும் காலம். ஒருபகுதி உத்தியோகப்பரிவு ஆண், பெண்களுக்கு சக ஊழியர்களுடன் நல்ல போக்கு தொடர்ந்து இருக்கின்றன. நீங்கள் மேலிடத்தில் முயன்ற காரியங்கள் சில வார்த்தையளவில் திருப்தியாக இருக்கிறது. வழக்கு இருப்பவர்களுக்கும் இந்த சூழ்நிலை இருக்கும். பிரயாணத்தை மேற்கொள்வது, முக்கியஸ்தர்கள் சந்திப்பு, தூரத்து சந்தோசச் செய்தி போன்றவையும் கிட்டும். பிற்பகுதியில் பழைய பிரச்சினைகள் சில தலைதூக்கி நிற்கும். மற்றவர் குறை கூறுவர். உங்கள் முயற்சிகளை தடைசெய்ய முடியாது. தொழிலைக் கவனிக்கவும். எதிர்பார்த்த வேலைகள் அமைப்பாக கூடி வருவதும் மனமகிழ்ச்சியை உண்டாக்கும். அரசாங்க மனிதர்களின் சந்திப்பும் அவர்கள் மூலம் எழுத்து நன்மையும் உள்ள மாதம் இது. குடும்பத்து தேவைகள் திருப்தியாக்கப்படும். கணவன் மனைவி உறவில் இருந்துவந்த இடைவெளி கருத்து வேறுபாடும் விலகி விட்டன. தொழில் வழி கடன்கள் இப்போது அடையாது என்றாலும் பாதிப்பைக் கொடுக்காது. வழக்கும் அப்படியே. புதிய தொழில் ஆரம்பத்திற்கு வேண்டிய அனுகூல சூழ் நிலை இப்போது உருவாகி வருகின்றன. கொடுக்கல் வாஙகலில் நீங்கள் தன்னைவிட பெரிய மனிதர்கள் தொழில் முக்கியம் வாய்ந்தவர்களையெல்லாம் சந்திக்க வேண்டிவரும். குடும்பத் தேவைகள் நெருக்கடியில் தான் பூர்த்திசெய்யப்படுகிறது. சிலவகை கூட்டு முயற்சியும் பலன் தரும் அளவுக்கு உருவாக்கப்பட்டுவரும். உங்கள் சத்துருக்கள் இப்போது பலம் குன்றியவர்களாக ஆகிவிடுவர். வழக்குப் பயம் வேண்டாம். வார்த்தையைக் குறித்தபடி காப்பாற்றி விடவும் முடியும். வேண்டாதவர்கள் சிலரையும் இப்போது சந்திக்கவேண்டிய அவசியம் உண்டாகும். முற்பகுதித் தனவரவு உண்டு. வெளி வட்டாரத்தினர் உதவியாக இருப்பதுபோல் உறவு வழியில்லை. செய்தொழில்வழி பிடிப்பாகத்தான் இருக்கும். சகோதர,சகோதரி வகையில் முக்கிய செலவுகள் இருக்கும். தந்தை தாய்வழி உறவில் தருமச் செலவுகளும் சிலருக்கு அவசியமாக இருக்கும். உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களுக்கு திடீர் பிரயாணம் உண்டாகும். குடும்ப வகைச் சொத்து விற்பனை செய்ய வேண்டிய அவசியத்தை உண்டாக்கும். கடன் சுமையை குறைப்பீர்கள். குடும்பத்தில் சில முக்கிய பொறுப்புக்களை ஏற்றிருக்கும் நீங்கள் மந்தமாக இருந்தால் ஏமாந்து விடுவீர்கள். வழிப்புடன் இருந்து செயல்படுத்த வேண்டும். (தொடரும்)

சோதிடமேதை ராமன்

# கலாநிதி சிவத்தமிழ் அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின்
# 79வது அகவை நிறைவு விழா சிறப்பு மலர்

## 07-01-2004

## "வாழி பல்லாண்டு"

சிவத்தமிழ் செல்வி என்னும் நற்பட்டம்
ஈழச் சிதம்பரத்தில் பெற்றுயர்ந்தோய்
தவத்தின் நற்பேறாயிங்கு உதித்து
தரணி போற்றபணி செய்வோய்
அவதி அல்லலுற்று அலையும்அகதிகட்கு
அகங்குளிர பணிசெய்வோய்
சிவனருள் பொலிநற்தங்கம்மாவே
சீரோடு வாழி பல்லாண்டு

எண்திசையும் பறந்து சென்று
எழிலாய் நற்றமிழ் சொன்னோய்
பண்ணோடு புகழ்பாடும் பௌராணிகர்களை
பாங்காய் கௌரவிப்போய்
எண்ணோடு எழுத்தும் நன்கு கற்றுய்ய
ஏழைச் சிறார்க் குதவுவோய்
பண்டிதையே நற்புகழ் தங்கம்மாவே
பலமுடன் வாழி பல்லாண்டு.

சி.சபாநாதன்
சங்கரத்தை



## பரிதியென வாழி

பண்டிதையாய் தமிழ் சைவம் புகட்டிப்பின்னே
பலநாடு சென்றங்கு முழக்கமிட்டு
கொண்டிருந்த அறிநெறியின் நாட்டத்தாலே
கோவிலொன்று துர்க்கைக்கு அமைத்துக் கொண்டு
அன்னமிட்டு அனாதைகட்கு இல்லம் கட்டி
அவர் தங்கிப் பயில்வதற்கு அமைத்தாய் இல்லம்
பண்புமிகு நின்சேவையினை பாராட்டி பின்னே
பட்டமதை தந்தார் பல்கலைகழகத்தாரும்
பெண்ணினத்தின் பெருமைக்கோர் இலக்கணமே
பெருமைமிகு தெல்லியூர் பிறந்த தாயே!
எண்ணரிய மாதரிங்கு வாழ்ந்து மென்ன
எவரிங்கு சமூகப்பணி செய்கிறார்கள்
வண்ணமுறு தமிழ் சைவம் வாழுமட்டும்
வாழி பரிதியென ஒளிபரப்பி வாழி!

விகடகவி மு.திருநாவுக்கரசு


சிவத்தமிழ் அன்னை பல்லாண்டு காலம் வாழ
வாழ்த்துகின்றோம்

**வியாவில் ஐயனார் தேவஸ்தானம்**

**காரைநகர்**

(சி-7100)

சிவத்தமிழ்ச் செல்வியின் பணி சிறக்க வாழ்த்துகின்றோம்

சகலவிதுமான ஓவிய வேலைகள், பிளாஸ்ரிக்
பெயர்ப்பலகைகள், இறபர் சீல்கள், பாடசாலை சின்னங்கள்,
சினிமா சிலைட், இன்னும் ஓவியத் தேவைகள் எவையோ
அவற்றினை செய்து பெற வடபகுதியில்
தனித்துவமான ஒரே நிறுவனம்

**யசோ**

35, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி இல. 0777-110610

அன்னையின் பணிசிறக்க வாழ்த்துகின்றோம்

அன்பளிப்புப் பொருட்கள், பாடசாலை உபகரணங்கள்,
அழகுசாதனப் பொருட்கள் பெற நாடவேண்டிய ஒரே இடம்

**விஷ்ணுகரன்ஸ்**
**VISHNUHARANS**

20, டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்

**விஷ்ணு அழகு மாடம்**

40, டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்

சிவத்தமிழ் அன்னை கலாநிதி தங்கம்மா
அப்பாக்குட்டி அவர்கள் பணி மேலும்
தொடர வாழ்த்துகின்றோம்

**தெல்லிப்பழை**

சிவத்தமிழ் அன்னை கலாநிதி தங்கம்மா
அப்பாக்குட்டி அவர்கள் பணி சிறக்க
வாழ்த்துகின்றோம்

தெல்லிப்பழை
ப.நோ.கூ.சங்கம்

(சி-7109)

அப்பாக்குட்டி அவர்கள் பணி சிறக்க
வாழ்த்துகின்றோம்
சந்திர சிறி மரக்காலை
41 பலாலி வீதி, கந்தர்மடம்
யாழ்ப்பாணம்.
உரிமையாளர்கள் :
பாலசந்திரன்
ஸ்ரீ காந்தன்

(சி-7110)




பொதுசன நூலகம்

பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல். -குறள்

வலம்புரி

## அன்னை காட்டிய அறப்பணி...

இந்த உலகில் கொடிது எதுவெனில் அது, இளமையில் வறுமையென ஔவைப் பிராட்டி கூறிய கருத்து இன்று மருத்துவ உலகால் ஏற்றுக்கொள் ளப்பட்டுள்ளது.

இளமை என்பது மனித வாழ்க்கையின் மிக முக்கியமான காலப்பகுதி. ஒரு மனிதனின் மூளை வளர்ச்சி மூன்று வயதுமுதல் 5 வயதுவரையான காலப்பகுதிக்குள் நடந்து முடிகின்றது.

இவ்வாறு ஐந்து வயதிற்குள் நடைபெறுகின்ற மூளை வளர்ச்சியின் அளவிலேயே அந்தக் குழந் தையின் எதிர்காலம் தங்கியுள்ளது.

இந்த ஐந்துவயது காலப்பகுதிக்குள் குறிப்பிட்ட குழந்தைக்கு போசாக்கான உணவு கிடைக்கா விடில் அந்தக் குழந்தையின் மூளைவளர்ச்சி மந்த நிலை அடையும். இதனை மருத்துவர்கள் உறுதி செய்துள்ளனர்.

இதேவேளை, இளமைக்காலத்திலேயே உடல், உள வளர்ச்சிகளும் நடைபெறுகின்றன. எனவே, இக்காலப்பகுதியில் போசாக்கான உணவுகள் கிடைக்காவிடில் வளர்ச்சி குறுகிப்போவது தவிர்க்க முடியாததாகிவிடும். இதனாலேயே கொடிது கொடிது இளமையில் வறுமை கொடிது என ஔவைப் பிராட்டி கூறினார்.

ஔவைப் பிராட்டி சொல்லிய அந்த வார்த்தை கள் இன்று யுத்தத்தால் பாதிப்படைந்துபோன வடபகுதிக்கு மிகப்பொருத்தமாக உள்ளது.

யுத்தம்தந்த அழிவுகளால் பெற்றோரை இழந்த பாலகர்கள், வறுமையால் வாடும் குழந்தைகள், குடும்பப் பாரத்தைச் சுமக்கும் சிறுவர்கள் இப் படியே ஒரு பரிதாபநிலைப்பட்டியல் நீண்டு செல்கின் றது. இவ்வாறு போரியல் தந்த கொடூரத்தால் ஒருபகுதிச் சிறுவர்கள் ஒருநேர உணவுக்காக ஏங்கிநிற்கின்ற பரிதாபம்.

இவற்றின் மத்தியில் ஆதரவற்ற சிறுவர்களை அன்போடு அரவணைத்து அவர்களைப் பராமரிக்கும் பெரும் பணியை ஆரம்பித்த சிவத்தமிழ் அன்னை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் அறப்பணி போற்றுவதற்குரியது. இன்று இந்த மண் ணில் என்ன பணிவேண்டுமோ அதனை இனங்கண்டு ஆரம்பித்து - பக்குவமாக வழிநடத்திய பெருமை அன்னை அவர்களையே சாரும். அவரின் அறப் பணியால் எத்தனையோ சிறுவர்கள் நன்மை பெறுகின்றனர்.

சிறுவர்களைப் பராமரிப்பதோடு மட்டும் தன் கடமையை நிறைவுசெய்துவிடாத அன்னை அவர் கள் முதியவர்களையும் பராமரிக்கும் அரிய பணி யைத் தொடங்கினார். அன்னை அமைத்த அறப் பணிப்பாதையால் இன்று யாழ்ப்பாணத்தில் சிறு வர் இல்லங்களும், முதியோர் பராமரிப்பு நிலையங் களும் உருவாகுவதற்கு அடிப்படையாக அமைந் துள்ளது என்றால், அது மிகையன்று.

ஆலயங்கள் சமுதாயக் கடமையாற்றவேண்டும். வெறுமனே மக்களிடம் பணத்தைப் பெற்று ஆல யத்தை அழகுபடுத்துவதுதான் சமயப்பணியாகாது. அதை இறைவனும் விரும்புவதில்லை. ஆலயங் கள் மக்கள்பணி செய்யவேண்டும்.

இந்தத் தத்துவத்தை நடைமுறைப்படுத்திய வர் எங்கள் சிவத்தமிழ் அன்னை அவர்கள். அவர் காட்டிய பாதையை, ஈழத்துச் சைவ ஆலயங்கள் பின்பற்றவேண்டும்.

வறுமையொழிப்பு, சுயதொழில்வாய்ப்பு, மருத் துவ வசதி, பசித்தோர்க்கு அன்னமிடல், ஏழை களுக்குக் கல்வி வசதி, வீடற்றோருக்கு வீட்டு வசதியென வசதிபடைத்த ஆலயங்கள் மக்கள் பணி செய்தால் ஏழ்மையென்றவார்த்தை இந்த மண்ணில் இருந்து விலகிவிடும்.

யாழ்ப்பாணத்து மக்கள் இறை நம்பிக்கையு டையவர்கள். ஆலயங்களுக்கு வாரி வழங்கத் தயங்காதவர்கள். எனவே, ஆலயங்கள் அறப் பணி செயின், மக்கள் தங்கள் கொடைகளைத் தாராளமாக வழங்குவார்கள்.

யாழ்ப்பாணத்துப் பொருளாதாரம் நலிந்த பொருளாதாரமன்று. இங்கு ஒழுங்குபடுத்தப் படாத பொருளாதாரமே உள்ளது எனப் பேராசி ரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் கூறி யிருப்பது இங்கு நோக்குதற்குரியது.

இலட்சக்கணக்கில் - கோடிக்கணக்கில் ஆலயப் புனரமைப்புக்குச் செலவு செய்கின்ற யாழ்ப்பாண மண்ணில் அன்ன சத்திரம் நிறுவி, அமுது படைப் பதில் கடினம் இருக்க முடியாது.

எனவே, சிவத்தமிழ் அன்னை அவர்கள் காட்டிய பாதையில் வசதிபடைத்த ஆலயங்கள் தங்கள் பணிகளைத் தொடர்ந்தால், இந்த மண்ணில் ஓர் புதுமை பிறக்கும் - புண்ணியம் விளையும், பூமியும் மகிழும்.

# கட்டுப்பாடுகளற்ற வர்த்தக வலய அமைப்பில் இலங்கை இணைந்துகொள்ள வாய்ப்பு

## பொருளியல் பேராசிரியர் சின்னத்தம்பி கருத்து

(கொழும்பு)

இலங்கை பெருமளவு இறப்பரை உற்பத்தி செய்யு மானால் தெற்காசியாவில் உருவாக்கப்படவுள்ள கட்டு பாடுகளற்ற வர்த்தக வலய அமைப்பில் அதனைச் சேர்த்துக் கொள்ளும் வாய்ப்பு ஏற்படும் என பெரதேனிய பல்கலைக் கழக பொருளாதாரத்துறைப் பேராசிரியர் சின்னத்தம்பி தெரிவித்துள்ளார்.

தெற்காசியாவில் தடைகள் அற்ற வர்த்தகப் பிராந்தியம் அமைக்கும் திட்டம் ஒன்றை சார்க் நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் இஸ்லாமபாத்தில் நடைபெற்ற சார்க் மாநாட் டின் போது உருவாக்கியுள்ளமை குறித்து வெளிநாட்டு ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே இத னைத் தெரிவித்தார்.

இதுகுறித்து மேலும் தெரிவிக்கையில்,

சார்க் அமைப்புக்குள்ளே வரும் தடைகளற்ற வர்த்தகப் பிராந்தியம் அமைக்கும் திட்டத்தின் மூலம் இலங்கையும் அதிகளவு நன்மையைப் பெறும்,

குறிப்பாக இலங்கை பெருமளவு இறப்பரை உற்பத்தி செய்யுமானால் அதிக நன்மையைப் பெறும். அத்துடன், கைத்தொழில் துறைக்கு மூலப் பொருளாகப் பயன்படுத் தப்படும் இறப்பரை அதிகளவு உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்வதன் மூலம் கூடிய வருமானத்தையும் அதிக செல் வாக்கையும் பெற்றுக் கொள்ளும். இதன் மூலம் அதிக தொழில் வாய்ப்புக்களையும் இலங்கைவாழ் மக்கள் பெறக் கூடியதாக இருக்கும்.

இதேவேளை, பொருளாதாரத்துறையில் முக்கிய பங்கு வகிக்கும் சுதந்திர வர்த்தகமானது தெற்காசிய நாடுகளிற் கிடையே அரசியல் ரீதியான ஒற்றுமைகளை ஏற்படுத்தவும் வழிவகுக்கும் என்று கருத்துத் தெரிவித்துள்ளார்

(உ-62,10)

### யாழ்.மாவட்ட மக்களின் பிரச்சினைகள் பற்றி

# ஆய்வுகளை மேற்கொண்டு தீர்வுகளைக் காண நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் வாழும் மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் உரிய தீர்வுகளை காணும் வகையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வினர் ஆய்வு ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர்

கடந்த 20 ஆண்டுகால யுத்த அனர்த்தங்களால் யாழ்.மாவட்டத்தில் வாழும் மக்கள் கல்வி, சுகாதாரம், பொலிஸ் அதிகார நடைமுறை மற்றும் இடப்பெயர்வும் அதற்கான பரிகாரம் தேடுதலும், மொழி உரிமை என்பன தொடர்பில் பல சிக்கல்களை எதிர்கொண்டுள்ளனர்.

யுத்த நிறுத்தம் ஏற்பட்டு இருவருடங்கள் முற்றாகக் கடந்த பின்னும் இவ்வாறான பிரச்சினைகள் தீர்க்கப்படாது தொடர்வது குறித்து பல கண்டனக் குரல்கள் யாழ். மாவட்டத்தில் இருந்து எழ ஆரம்பித்துள்ளன.

இவ்வாறான விடயங்களில் மக்களுக்குள்ள உரிமை களை உறுதிப்படுத்த வேண்டிய கடப்பாடு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினருக்கு உள்ளது என்ற வகையில் ,

இவ்விடயங்கள் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகள், யாழ். மாவட்டத்தில் வாழும் மக்களையும் மக்கள் அமைப்புக்களின் பிரதி நிதிகளையும் சந்தித்து விசேட ஆராய்வுகளை மேற் கொள்ளவுள்ளனர்.

இவ்வாண்டு நடுப்பகுதியில் மேற்கொள்ளப்படவுள்ள இவ் ஆய்வுகள் மூலம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் விரிவான ஓர் அறிக்கையைத் தயா ரித்து அதனை அடிப்படையாகக் கொண்டு நடவ டிக்கை கள் மேற்கொள்வார்கள் என தெரிவிக்கப்படுகிறது.(உ-4)

## பாதுகாப்பு அமைச்சின் கீழிருந்த நிறுவனங்கள் உள்துறை அமைச்சின் வசம்

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்ட சில நிறுவனங்களும், திணைக்களங்களும் மீண்டும் உள்துறை அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

கடந்த 2ஆம் திகதி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வெளியிட்டுள்ள அதிவிசேட வர்த்தமானி அறிவித் தலுக்கமைய இந்தப் பொறுப்பு மாற்றங்களை மேற் கொண்டுள்ளார்.

இதன்படி சிறைச்சாலை, குடிவரவு, குடியகல்வு, ஆட்பதிவு குடிசனப் புள்ளி விபரவியல் ஆகிய திணைக் களங்களும் இந்திய வம்சாவளியினரைப் பதிவு செய்யும் ஆணையாளர் அலுவலகமும் மீண்டும் உள்துறை அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

இவற்றை விட வெடிப்பொருள் ஆயுத சட்டவிரோதக் குடியகல்வைத் தடுக்கும் விடயங்களும் மீண்டும் உள்துறை அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

கடந்த 19ஆம் திகதி வெளியிடப்பட்ட அதி விசேட வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய ஜனாதிபதி இந்தத் திணைக்களங்களையும் நிறுவனங்களையும் பாதுகாப்பு அமைச்சின் பொறுப்பின் கீழ் கொண்டுவந்தமை குறிப் பிடத்தக்கது.

(உ-61,8)

## ஓம் திைசரி தியானம்

### பேரானந்தம்

பிறவிப் பயன் இறைவனை அறிவதா கும். இதை ஒரு பொழுதும் மறவாதே. அஹிம் சையைக் கைக்கொள். உண்மை பேசு. தெய்வ நம்பிக்கை கொள். எதையும் அவருக்காகவே செய். முழு பக்தியுடன் பிரார்த்தனை செய். மனம் இந்திரியங்கள் இவற்றுடன் சண்டையிட்டு இறைவன் பால் திருப்பு.

உன் கைகள் மூலமாக இறைவன் வேலை செய்கின்றார். உன் கண்கள் மூலமாக அவர் பார்க்கின்றார். உன் காதுகள் மூலமாக அவர் கேட்கிறார் என்று நினைத்துக் கொள். நீ பெரும் மாறுதல் அடைவாய். உன்பார்வையே பரந்த தாகமாறும். நீ பேரானந்தம் எய்துவாய்.

சுவாமி சிவானந்தர்

# தமிழைக் களவாடும் இனவாதிகள்

(கொழும்பு)

களனிப் பல்கலைககழகத்தில மூன்று மொழிகளிலும் வெள்ளி முலாம் பூசப்பட்ட எழுத்துக்களில் பொறிக்கப்பட்டி ருந்த பெயர்ப்பலகையில் உள்ள தமிழ் எழுத்துக்கள் பெயர்க் கப்பட்டு அகற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பிட்ட இனவாத அமைப்பு ஒன்றே இதனைத்திட்ட மிட்டு செய்கின்றது எனவும் இத்தகைய செயல கிரிபத் கொடை, களனி, கடவத்தை ஆகிய பகுதிகளில் உள்ள தனியார் நிறுவனங்களிலும அண்மைக் காலங்களாக இடம் பெற்று வருவ தாகவும் அப்பகுதியில் உள்ள தமிழ கல்விமான்கள் கவலை தெரிவித் துள்ளனர்.

இது குறித்து மூன்றாம் நிலைக கல்வி அமைச்சரிடம் தாம் முறைபபாடு செய்துள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

(உ-10)

## புண்ணிய நாச்சியம்மையார் தின பண்ணிசைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்-சைவ பரிபாலன சபை நடாத்தும் புண்ணிய நாச்சியம்மையார் தின பண்ணிசைப் போட்டி எதிர்வரும் பெப்ரவரி மாதம் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை மாணவர் மட்டத தில் நடாத்தப்படவுள்ள இப்போட்டிக கானவிண்ணப்பங்களை அனுப்பும இறுதித்தினம் இம் மாதம் 20 ஆம திகதியாகும்.

இப் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெறுவோருக்கு முறையே தங்கம், வெள்ளி, வெண் கலப பதக்கங்கள வழங்கப்படவுள ளன.

(உ-3)

### ஜனாதிபதியுடன் இணைந்து

# பிணக்குகளுக்குத் தீர்வுகாண ஐ.தே.மு. அரசாங்கம் தயார்

### அமைச்சர் காமினி ஜெயவிக்கிரம பெரேரா

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் தயாராக இருப்பதாக நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவ அமைச்சர் காமினி ஜெயவிக்கிரமபெரேரா தெரிவித்துள்ளார்.

பொலநறுவை மகா ஹல்மில்ல குளத்தின் புனரமைப்பு நடவடிக்கைகளை நேற்று ஆரம்பித்து வைத்து உரை யாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு மேலும் கூறுகையில்,

பிரதமர் ரணில் விக்கிரம சிங்க தலைமையிலான அரசிடம பாதுகாப்பு அமைச்சை வழங்குவதுடன், அதிகாரப் பரவ லாககல் தொடர்பாக ஆராய்வதற்கு சகல கட்சிகளின் தலை வர் களையும ஒன்றிணைத்து குழுவொன்றை நியமிக்க வேண்டும். இந்தக் குழுவிற்கு ஜனாதிபதி தலைமைதாங்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

(உ-61,8)

# காக்கைதீவுப் பகுதியில் கண்டபடி கழிவுகளைக் கொட்டாதீர்

## யாழ்.மாநகர ஆணையாளர் பொதுமக்களுக்கு அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

காக்கைதீவுப் பகுதியில் கண்ட பாட்டில் கழிவுகளைப் போடுவது தொடர்பில் யாழ்.மாநகர ஆணையாளர் இ.இராமலிங்கம் பொது மக்களுக்கு முக்கிய அறிவுறுத் தலை வழங்கியுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்,

மாநகரசபை எல்லைக்குள் தினமும் சேரும் கழிவுகளைக் கொட்டுவதற்கென காக்கைதீவில் பிரத்தியேகமான காணிபொன்று மிக நீண்ட காலத்திற்கு முன்னர் மாநகரசபையினால் கொள்வனவு செய்யப்பட்டு அக் காணிக்குள்ளேயே அன்றாடம் சேரும் கழிவுகள் போடப்பட்டு வருகின்றன.

இதனிடையே உடைந்த பிங்கான் துண்டுகள், சிகை அலங்கரிப்பு நிலையங்களில் சேரும் தலைமுடிகள், உடைந்த கண்ணாடித்துண்டுகள், வாகனங்களின் பழுதடைந்த பகுதிகள், உதிரிப்பாகங்கள், தனியார் வைத்தியசாலைக் கழிவுகள், இறைச்சிக் கழிவுகள் போன்றன ஒழுங்கற்ற முறையில் மேற்படி காணிக்குள் பொது மக்களால் போடப்படுவதால், சபை வாகனங்கள் காணியின் பின்புதிக்குச் சென்று கழிவுப் பொருட்களைப் பறிக்கமுடியாதிருப்பதோடு வீதிப் போக்குவரத்திற்கு இடையூறும் சுகாதார சீர்கேடும் துர்நாற்றமும் ஏற்படுவதும் அதிகரித்துள்ளது.

கழிவுகளை அகற்றுவதற்கும், கழிவுகளைக் கொட்டும் இடத்தினை ஒழுங்காக பராமரிக்கவும் பொதுமக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமாகும்.

எனவே, மேற்குறித்த கழிவுகளை தன்னிச்சையாகக் கொண்டு சென்று கண்ட கண்ட இடங்களில் போடுவதைத் தவிர்த்து மாநகர சபையின் பொதுச் சுகாதாரப் பொறியியற் பிரிவினருடன் தொடர்பு கொண்டு அவற்றை சபை வாகனங்கள் மூலமாக அகற்றுமாறு அறிவுறுத்தப்படுகின்றீர்கள்.

எதிர்காலத்தில் கழிவுகள் கொட்டும் இடத்திற்கு பாதுகாப்பு வேலிகள் அமைத்து காவலாளிகள் நியமிக்கப்படவிருப்பதால், மேற்படி நடைமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் சபையுடன் ஒத்துழைக்குமாறு தயவாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாநகரசபை மூலம் அல்லாது வேறு விதத்தில் கழிவுகளை மேற்குறிப்பிட்ட இடத்தில் போடுவது தடை செய்யப்பட்டுள்ளது என்பதனை தயவுசெய்து கவனத்திற்கு எடுத்து, ஒத்துழைப்பினை வழங்கும்படி பொதுமக்களை வேண்டிக்கொள்கின்றேன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-7)

## விபத்தில் படுகாயம்

(சுண்டுக்குளி)

இராணுவத்தினர் ஓட்டிவந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் சைக்கிளில் பயணம்செய்த இளைஞன் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை 9மணியளவில் யாழ்.மாவட்டச் செயலகம் அருகில் இடம்பெற்ற இந்த விபத்துச் சம்பவத்தில் தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கற்பிக்கும் எஸ்.ஜோயல் (வயது-25) என்பவரே படுகாய மடைந்தவராவார். (உ-120)

## ஐ.ரி.பாக் மாணவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

தகவல் தொழில் நுட்பப் பூங்காவில் **Diploma in MS-Office** பயிற்சியினை நிறைவு செய்துள்ள 11 பிரிவுகளுக்கான பரீட்சைகள் யாவும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ள திகதிகளில் யாழ்.இந்துக் கல்லூரியில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் இடம்பெறும்.

பரீட்சைக்கு வரும் மாணவர்கள் தமது அனுமதி அட்டையுடன், அடையாள அட்டையினையும் தவறாது கொண்டுவருமாறும் இதுவரை பரீட்சைக்கான உறுதிப்படுத்தலை மேற்கொள்ளாத மாணவர்கள் நாளை வியாழக்கிழமை உடனடியாக பயிற்சி முகாமையாளரைச் சந்திக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. (த)

## சனி,ஞாயிறு தினங்களில் முழுநாளும் கடைகள்திறப்பு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு இன்று தொடக்கம் எதிர்வரும் 14.01.2004 வரை சனி, ஞாயிறு மற்றும் வர்த்தக விடுமுறை தினங்களில் முழுநாளும் கடைகள் திறந்து வியாபாரம் செய்வதற்கு சகல வர்த்தகர்களும் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் இந்த நாட்களில் வேலை செய்யும் ஊழியர்களின் நலன் பேணப்படவேண்டும் எனவும் யாழ். வணிகர் கழகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## மஹா வித்வானுக்கு சமர்ப்பண நடனம்

(யாழ்ப்பாணம்)

மஹாவித்வான் வீரமணி ஐயரின் நினைவு தின நிகழ்வு நாளை மறுதினம் 9ம் திகதி மாலை 4மணியளவில் நல்லை ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் சமர்ப்பண நிகழ்ச்சியாக இராமநாதன் நுண்கலைப் பீட நடனத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி கிருசாந்தி ரவீந்திரா அவர்களின் நெறியாள்கையிலான நடன அரங்கம் இடம் பெறவுள்ளது. (ந)

## மருந்தாளர் பயிற்சிநெறி நேர்முகப் பரீட்சையில் தோற்றியவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

வடக்குக் கிழக்கு மாகாண சுகாதாரஅமைச்சினால் நடத்தப்படுகின்ற வெளிவாரி மருந்தாளர் பயிற்சி நெறிக்கான நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியவர்களில், புள்ளி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இப் பயிற்சி நெறிக்கு கடந்த 3ம் திகதி வரை சமுகமளிக்காதவர்களின் இடங்களுக்கு நேர்முகப்பரீட்சைக்கு தோற்றியவர்கள் பெற்ற புள்ளி ஒழுங்கின்படி சேர்த்துக் கொள்ளப் படவுள்ளனர்.

இப் பயிற்சிக்கான நேர்முகப் பரீட்சைக்கு தோற்றியவர்களில் பயிற்சி நெறியைத் தொடர ஆர்வமுள்ளவர்கள் எதிர்வரும் 10ம் திகதி சனிக்கிழமை மு.பகல் 9 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளது. (த)

## மத வன்முறை...

ரின் திடீர் மறைவுடன் ஆரம்பிக்கப்பட்டன. இவரின் அனுதாபத்தையும் அதிர்ச்சியையும் பயன்படுத்தி அவரின் இறுதிக் கிரியைகளை நடத்திய பௌத்த குருமார் ஏனையமதத் தலைவர்களை தொந்தரவு செய்யவேண்டாமென கேட்டுக் கொண்டிருந்தனர். பொலிஸார் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

இப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண மக்களை அமைதியாக இருக்குமாறு கேட்பது போல் பெரும்பயன் ஏற்படப்போவதில்லை வன்முறைகளை நிறுத்துவதற்கு ஜனாதிபதி ஜே.வி.பியினரைக் கோரவேண்டும் எனவும் ஐ.தே.மு. செயற்குழு கேட்டுள்ளது. (த)

## புலிகளின்...

பாவிக்க வேண்டுமேயொழிய இன வாதிகளுடனும் இராணுவ வல்லாதிக்க சிந்தனையுடையவர்களுடனும் ஜனாதிபதி கூட்டுச் சேரக் கூடாதெனவும் இடதுசாரிக் கட்சிகள் எச்சரித்துள்ளன என கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண தெரிவித்தார். (ம)

## மனோ...

காக ஐந்து பேர் அடங்கிய சர்வதேச உறவுகளுக்கான அமெரிக்கப் பாராளுமன்றக் குழுவினர் எதிர்வரும் ஜனவரி 15ந் திகதி மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-6)

## யாழ்.பல்கலைக்...

தான் நம்புவதாக சங்கத்தலைவர் சுந்தரராஜ் குற்றமை வெளியிட்டுள்ளார்


### தேவை

தமிழ் - ஆங்கில தட்டெழுத்தாளர்கள் தேவை

கொம்பியூட்டர் அறிவுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் (இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)

சுயவிபரக் கோவையுடன் 21-01-2004க்கு முன் விண்ணப்பிக்கவும்

விளம்பர இல. - 320 மே/பா 'வலம்புரி', வெள்ளாந்தெரு யாழ்ப்பாணம்

(8075)



### விக்னா கல்வி நிறுவனம்

A/L 2006 கலை,வர்த்தக வகுப்புகள்

ஆரம்பம் : சனி, ஞாயிறு காலை 8மணி

Acc. திரு. பாலவாசன்
B.st. திரு. யசோ
LOG. திரு.சயந்தன்
HIC. திரு. பத்மராஜா
HIN. திரு. N.T.தரன்
Plscie. திரு. ஸ்ரீரங்கநாத்
Chri. திரு. வசந்தன்
ECON. திரு.K. உதயன்
TAM. திரு. குழந்தை (பிரிவு I) திரு. மாவை லிங்கம் (பிரிவு II)
GEO. திரு. பாபு
HIST. திரு. சுதன் திரு. பத்மன்
DRAMA. திரு. மதி

* அன்றும், இன்றும் இனி என்றென்றும் பொருளியல் திரு.K. உதயன்

(சி-7094)



### முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



07☆01☆2004

லோகநாதன் - விஜயலட்சுமி தம்பதிகளின் செல்வப் புதல்வி

செல்வி - சுவஸ்திகா

தனது முதலாவது பிறந்தநாளை எதிர்வரும் சனிக்கிழமை (10-01-2004) அன்று அவரது இல்லத்தில் வெகுவிமரிசையாக கொண்டாடவுள்ளார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அக்காமார், அண்ணாமார், அம்மம்மா, அப்பம்மா, பெரியம்மாமார், பெரியப்பாமார், சித்திமார், சித்தப்பாமார், மாமாமார், அத்தைமார், மச்சாளமார் மற்றும் அனைவரும் செல்வியை சகல சௌபாக்கியங்களும் பெற்று சீரும் சிறப்புமாக வாழவேண்டுமென வாழ்த்துகின்றார்கள்.

125/39,கண்ணாபுரம், கொட்டடி, யாழ்ப்பாணம். வன்னிச்சியம்மன் கோவிலடி, வல்வெட்டி.



### திருமறைக் கலாமன்றம்

CENTRE FOR PERFORMING ARTS

விண்ணப்பங்கள் கோரல்

கவின் கலைகள் பயிலகம்

SCHOOL OF FINE ARTS


"வாழ்க்கையில் ஆன்மீகத்தின் பங்களிப்பு"

## "வாழ்க்கையில் ஆன்மீகத்தின் பங்களிப்பு"
## மாதாந்த துறைசார் கருத்தரங்கு

**இடம் :** யாழ்.கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி
**தலைவர்:** செல்வி யாமினி பாஸ்கரன்
(ஆசிரியை சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி)
**காலம் :** 07.01.2004 புதன்கிழமை பி.ப.2.00 மணி

**தொழில்துறை:** உடற்கல்வித்துறை

**சிறப்பு சொற்பொழிவு வழங்குவோர்**
**பிரம்மகுமாரர் சிவசுப்பிரமணியம்**
**(சித்த வைத்தியர் கலாநிதி)**

**செல்வி பிரதீபா கிருஷ்ணபிள்ளை**
**(உடற்கல்வி ஆசிரியை, யா/வயாவிளான் ம.ம.வி.)**

**செல்வி கிரிஜா கந்தசாமி**
**(உடற்கல்வி விரிவுரையாளர், யா/தேசிய கல்விக் கல்லூரி)**

**பிரம்மகுமாரிகளின் செயற்பாட்டுச் சொற்பொழிவு**
**தியானப் பயிற்சி (5நிமிடம்)**
**நன்றியுரை:-செல்வி தயாளினி கிருஷ்ணபிள்ளை**
**ஆசீர்வாதங்களும் பிரசாதமும் வழங்கப்படும்**

**அனைவரையும் யாழ். பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தினர் பேரன்புடன் அழைக்கின்றனர்.**

(C/7095)

தங்கராஜா நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

எனினும் தீர்வு கிடைக்காது விடின் போராட்டம் தொடருமென்றும் அவர் கூறினார். (இ-7,3)

## விற்பனைக்கு

சகல விதமான T.V அன்ரனாக்கள், பூஸ்டர்கள், வயர் மற்றும் T.V, ரேடியோ உதிரிப் பாகங்கள் நிதான விலையில் பெற்றுக் கொள்ள வேண்டிய இடம். **நியு சிற்றி ரேடேர்ஸ்** 135, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம். (குளத்திற்கு முன்பாக)
**T.P:222-3226** (சி-6980)

**A/L 2006**

**கலை, வர்த்தகப் பிரிவுகள்**

**ஜனவரி - 10**

**சனி காலை**
**8 மணி**

**DMI**
யாழ் நகர்

(சி-7069)

## SCHOOL OF FINE ARTS

**2004ஆம் ஆண்டிற்கான புதிய பிரிவுகளில் பயில்வதற்கு பின்வரும் பாடநெறிகளுக்கு மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

- வாய்ப்பாட்டு
- ஓர்கன்
- வீணை
- பரதம்
- மிருதங்கம்
- புல்லாங்குழல்
- கதகளி
- வயலின்
- சித்திரம்
- கிற்றார்

**இப் பாடநெறிகளுக்கு குறைந்தளவு கட்டணமே அறவிடப்படும்**

## நாடகப் பயிலகம்
## SCHOOL OF DRAMA

**எமது மன்றத்தால் வருடாந்தம் இலவசமாக நடத்தப்படுகின்ற நாடகப் பயிற்சி நெறிக்கான 2004ம் ஆண்டிற்கான புதிய பிரிவில் பயில்வதற்கு ஆண்,பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

**நாடகக் கலையில் ஆர்வமுள்ளவர்களுக்கும், அரங்கு தொடர்பான பயிற்சியை பெறவிரும்புபவர்களுக்கும் மிகவும் பயனுள்ளது.**

## சிறுவர் கலைக்கூடம்
## CHILDREN `S THEATRE

**இக் கலைக்கூடத்தில் 2004ம் ஆண்டிற்கான புதிய பிரிவில் சேர்ந்து பயில விரும்பும் சிறுவர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

**சிறுவர் கலைக்கூடமானது சிறுவர்கள், உடல், உள வளர்ச்சியை மனதிற் கொண்டு அவர்கள் தமக்குரிய உரிமையுடன் வளரவும், கலை, விளையாட்டு ஊடகங்களுக்கூடாக உருவாக்கம் பெறவும்தக்கதாக இலவசமாக நடத்தப்படுகின்றது.**

| | | | |
|---|---|---|---|
| பிரிவு | I | - | 5 - 12 வயதுவரை |
| பிரிவு | II | - | 13 - 16 வயதுவரை |

**குறிப்பு :-**
- அனைத்துப் பிரிவுகளுக்குமான விண்ணப்ப முடிவுத் திகதி 20-01-2004 ஆகும்
- விண்ணப்பப் படிவங்களை நேரடியாக யாழ்.மன்ற அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்

238, பிரதானவீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி : 021 222 2393
e-mail - cpajaffna@eureka.lk
website - www.cpateam.org. (சி-7096)

பொதுச் செயலாளர்,
திருமறைக்கலாமன்றம்.

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.01.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.